53/1152

SIDDHANTHAM
Vol. 25—No. 1

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

25 | கர தை 1952 ஜனவரி | இதழ் 1

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| காட்டு ஒலி ... | 1 |
| குன்றக்குடி ... | 9 |
| பண்டைச் சைவர் இல்லற வாழ்க்கை ... | 14 |
| ஒன்பது கோள்கள் ... | 18 |
| சமாஜ ஆண்டு அறிக்கை ... | 24 |
| சமாஜ செயற்குழு ... | 27 |
| அறிக்கைகள் ... | 31 |
| வரப்பெற்றோம் ... | 32 |
| சைவ... தலைவர் உரை ... | 1-16 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS
3L
R673N211 N28
N52.25.1.
188877

... இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
... : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை
... சித்தாந்த மகா சமாஜம்
... முதலி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15

# செய்தித் திரட்டு

காஞ்சி மெய்கண்டார் கழகம் 25-11-1951 அன்று ஆறுமுக நாவலர் அவர்கள் திருநாளை வித்துவான் - திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் தலைமையில் கொண்டாடிற்று.

காஞ்சி மெய்கண்டார் கழகத்தினரால் 26-11-1951 அன்று திருவேகம்பநாதர் திருக்கோயிலில் 1008 சிவலிங்கப் பெருமானிடத்தில் வழிபாடும், பின்னர் திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் அவர்களால் பெரியபுராண விரிவுரையும் நடைபெற்றன.

சென்னை, இராயப்பேட்டை - ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபையில் கார்த்திகைச் சோமவார நாட்களில் சொற்பொழிவுகள் முறையே திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் "விரதங்கள்" பற்றியும், சித்தாந்த பூஷணம் - பூ. சமரபுரி முதலியார் அவர்கள் "கரந் தரும் பயன்" என்பது பற்றியும், அம்பை - வித்துவான் - திரு. இரா. சங்கர முதலியார் அவர்கள் "என்னதோ இங்கு அதிகாரம்" என்பது பற்றியும், சங்கீத பூஷணம் - திரு. கு. புண்ணியகோட்டி அவர்கள் இசைக் கருவிகளுடன் தேவார—திருப்புகழ்ப் பாராயணமும் செய்தார்கள்.

*8-12-51* சிரவணம்பட்டிக் கௌமார மடாலயத்தில் குருபூசை வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆராதனை, பஜனை, மாகேசுர பூசை, சொற்பொழிவுகள் நடைபெற்றன. ஆசிரியர் தலைமை வகித்தார்கள்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்துக்குச் சொந்தமான ஐந்து கோவில் தேவஸ்தானங்களுள் ஒன்றாகிய திருக்கோலக்குடி தேவஸ்தானத்தில் 11-12-51 அன்று செட்டிநாட்டரசர் ராஜா சர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள் மின்சார விளக்கைத் திறந்து வைத்தனர். திரு. A. உத்தண்டராம பிள்ளை அவர்கள், B. A., B. L. தலைமை தாங்கினார்கள்.

*12-12-51* திருப்பேரூரில் பரணி தீபமும் அடுத்த நாள் கார்த்திகை தீபமும் நடைபெற்றன. வெளிப்பிரகாரத்துத் தளவரிசைத் திருப்பணி நடைபெறுகின்றது. ரூ. 150

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 25 | கர தை 1952 ஜனவரி | இதழ் 1

## நாட்டு ஒலி

**1.** கால அமைதி: தற்போது நடப்பது மார்கழித் திங்கள். இது தக்ஷிணாயனத்தின் இறுதித் திங்கள். இனி மேல் பிறப்பது உத்தராயனத்தின் முதல் திங்களாகிய தைத்திங்கள். மார்கழித் திங்கள் முழுதும் பனி பெய்வதினால் குளிராக இருக்கும். அக்குளிருக்கு மக்கள் சிறிது அஞ்சிச் சோம்பலாய் இருக்கக்கூடும். ஆனால் அச்சோம்பலை நீக்கி ஊக்கத்தோடு இருப்பது நமது கடமையாகும். இதற்குத் தக்கபடி நமது கடமைகளை முன்னோர்கள் விதித்திருக்கின்றனர். விடிவதற்கு முந்தி ஐந்து நாழிகை அளவிலேயே படுக்கையை விட்டெழுந்து, தூய்மையான நன்னீரில் குளித்துவிட்டுத் திருவெம்பாவை ஓதிக் கடவுளை வழிபட்டுப் பிறகு சிற்றுண்டி அருந்தித் தம் தம் வேலைக்குப் போகவேண்டும். அவ்வாறு இளங் காலையிலேயே குளிப்பதனால் குளிர் வாதை நீங்கிவிடும். இறைவனை வழிபடுவதினால் மனம் தூய்மை அடையும். பிறகு வேலைகளுக்குச் செல்வதினால் சுறுசுறுப்போடு வேலை நடைபெறும். எப்படிப்பட்ட மனப்பான்மையெனினும் வெய்யில் காலத்தில் உடலுக்கு அயர்வு தோன்றும், குளிர்காலத்தில் தோன்றாது. ஆதலால் குளிர் காலத்தைவிட வெய்யில்காலத்தில் வேலை மிகுதியாகச் செய்ய முடியுமா? இதுதான் காலத்தின் அமைதி.

இந்த அமைதியை நமது முன்னோர்கள் கண்டு இதற்கு ஒரு பொருத்தமான காரணமுங் கூறுவர். நமக்கு ஒருநாள் என்பது பூமி தன்னை ஒரு முறை சுற்றிக்

கொள்ளும் நேரம் ஆகும். அது பகல் இரவு என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஆனால் தேவர்களுக்கோ நமக்குள்ள ஒரு வருடம் அவர்களுக்கு ஒரு நாள் ஆகும். அது பூமி சூரியனை ஒருமுறை சுற்றிவரும் நேரமாகும். அது பன்னிரண்டு மாதங்கள் கொண்டது. அதில் சூரியன் 6 மாதம் தெற்கிலும், மற்ற 6 மாதம் வடக்கிலும் தோன்றுவான். தெற்கில் தோன்றும்போது மழையும் குளிரும் மிகுதியாகவும், வடக்கில் தோன்றும்போது வெய்யிலும் வெப்பமும் மிகுதியாகவும் இருக்கும். தெற்கு அயனத்தில் தேவர்களுக்கு இரவு. வடக்கு அயனத்தில் அவர்களுக்குப் பகல். இரவு முடியும்போது விடியல் ஆகும். இரவின் இறுதிக் காலம் மார்கழித் திங்களாகும். அப்போது தேவர்கள் எழுந்து இறைவனைத் தொழுவார்கள். அவர்கள் செயலையே அனுசரித்து மக்களாகிய நாமும் மார்கழித் திங்கள் முழுவதும் இறைவனை வழிபடுகிறோம். அதனால் பயனும் அடைவோம்.

**2.** மார்கழிப் பெருமை : இறைவனை வழிபடுதற்கு மட்டுமா மார்கழித் திங்கள் பயன்படுகிறது? தெற்கு அயனத்தில் மழையும் காற்றும் மிகுதியாக அடிக்குமாதலால், பருவத்துப் பயிர்களை விளைவிக்க அது ஏற்ற சமயம் ஆகும். மனிதனுடைய உணவுக்கு ஏற்ற பொருள்கள் பருவப் பயிர்களே. நெல் முதலிய ஒன்பது வகைக் கூலங்கள் இந்த அயனத்திலேயே பயிர் இடப்படுகின்றன. அவைகள் விளைந்து விளைவைத் தருவதும், இந்த அயனத்தின் இறுதியிலேயே கார்த்திகைத் திங்கள் முடியும்போதே பயிர்கள் காய்க்கத் தொடங்குகின்றன. மார்கழி தொடங்கினதும் குடியானவனுக்கு வேலை குறைந்துவிடும். பயிர்களைப் பாதுகாப்பதே அவனுடைய முக்கிய தொழில். அத்திங்கள் இறுதியில் பலனை எடுக்கலாம் என்ற மகிழ்ச்சி அவன் மனதில் தோன்றும். அம்மகிழ்ச்சி தோன்றத் தனக்கு அருள்புரிந்த இறைவனை வழிபடவேண்டுமென்ற எண்ணம் தோன்றும். ஆகவே, அவன் விடிவதின் முன்னர் எழுந்து குளித்துவிட்டு, அதனால் குளிரையும் போக்கிக்கொண்டு இறைவனைத் தொழத் தொடங்குவான். விடிந்தவுடன் தன் பயிரைக் கண்காணிக்கச் செல்வான். மார்கழித் திங்கள் முடிந்ததும் தை பிறக்கும். விளைவை அறுத்துப் பொங்கல்

186877



இட்டு இறைவனுக்குப் படைத்துப் பிறகு மற்றைத் தானியத்தைத் தன் வீட்டிற்குக் கொண்டு போவான். ஆறுமாத காலம் வருந்தி உழைத்ததைத் தைத்திங்களில் மகிழ்ச்சியோடு அனுபவிக்கிறான்.

ஆகவே, மார்கழித் திங்கள் குடியானவனுக்கும் மிகவும் சிறந்ததல்லவா? இனி, மற்றத் துறைகளில் ஈடுபடும் மக்களுக்கும் இத்திங்கள் பலவிதத்திலும் சிறந்ததென்று கூறவேண்டும். அரசியல் அலுவலாளர்களுக்கும், பள்ளிப் பிள்ளைகள் பள்ளி ஆசிரியர்களுக்கும் இத்திங்களில் ஓய்வு கிடைக்கின்றது. அப்போது அவரவர்கள் தங்கள் மனதிற்கேற்ற செயல்களில் நாட்டம் கொள்ளுவார்கள். தீர்த்த யாத்திரைகள், உல்லாச யாத்திரைகள், பொருட்காட்சிகள், வேடிக்கை அலுவல்கள், லௌகீக வைதீக மாநாடுகள் இவைகளெல்லாம் கூட்டப்படும்.

சென்னை நகரில் பல இன்னிசை மாநாடுகளும், வர்த்தக மாநாடும், தமிழன்பர் மாநாடும், மற்றும் பல மாநாடுகளும் கூடின. தமிழ் நாட்டில் பற்பல இடங்களில் சமய மாநாடுகளும் கூடின. இவைகளெல்லாம் கூடுவதற்கு மார்கழித் திங்களே சிறந்தகாலமாக ஏற்பட்டிருப்பதைக் குறிப்பாக நோக்கி அறியலாம்.

**3.** சைவமாநாடு : சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் ஆண்டுதோறும், ஆண்டு நிறைவு விழாவும், சைவர் மாநாடும் கூட்டுவது வழக்கம். மற்ற மகாநாடுகளைப் போல சைவர் மகாநாடும் மார்கழித் திங்களிலேயே கூட்டப் பெறுகிறது. இந்த ஆண்டு 46-வது மகாநாடாகக் குன்றக்குடியில் கூட்டப்பெற்றது. குன்றக்குடியின் வளமை, வசதி, பெருமை முதலியவைகள் தலப்பகுதியில் விவரிக்கப் பெறும். குன்றக்குடியைச் சுற்றிக் கணக்கற்ற ஊர்களில் நகரத்தார்கள் மிகச் செல்வாக்கோடு வசிக்கிறார்கள். அவர்கள் சைவத்திலும், சமய ஒழுக்கத்திலும் மிகச் சிறந்தவர்கள். ஆலயத்திருப்பணிகளில் ஒப்பற்ற ஆர்வம் கொண்டவர்கள். அன்னார்களில் பல பெரியார்கள் வரவேற்புக் குழுவில் சேர்ந்து சமய மாநாட்டைக் கூட்டினார்கள். ஆகவே அம் மகாநாடு சிறப்புப் பெறாமல் இருக்குமா? வரவேற்புக் குழுவில் சைவ அன்பிலும், கல்வியிலும், செல்வத்திலும் சிறந்த பெரியார்கள் சேர்ந்திருந்தார்கள். ஆகவே

மகாநாடு சிறப்பாகவும், ஒழுங்காகவும், பயன்படத் தக்கதாகவும் நடைபெற்றது.

மேலும் சைவ மாநாட்டோடு சேர்த்தி மங்கையர் மகாநாடும் இளைஞர் மகாநாடும் நடத்துவது வழக்கம். அந்த வழக்கத்தை ஒட்டி இந்த ஆண்டும் அவ்விரண்டு மகாநாடுகளும் கூட்டப் பெற்றன. மங்கையர் மகாநாடு இரண்டாவது நாள் பிற்பகலில் நடைபெற்றது. சைவ மங்கையர்கள் பலபேர் வந்திருந்தார்கள். ஆனால் போதுமான அளவு இல்லை. காரணம் வெகு தொலைவிலிருந்து மங்கையர்கள் வரவேண்டியிருந்தது. நிரம்பப் படித்தவர்களும் சமய ஒழுக்கத்தில் சிறந்தவர்களும் ஆன இளைய மங்கையர்கள் வெகு அழகாகவும் உருக்கமாகவும் சொற்பொழிவு ஆற்றினார்கள். மங்கையர்க் கூட்டமே மிகச் சிறந்திருந்ததென்று ஒவ்வொருவர் மனதிலும் பட்டது. முற்பகலிலே இளைஞர் மகாநாடு கூடிற்று. மிகவும் முதிய 'இளைஞரா'ன பண்டித மணியவர்கள் இளைஞர் கூட்டத்தில் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றியது போற்றத் தக்கது. மற்றொரு முதியவரான தூத்துக்குடி சிவகுருநாத பிள்ளையவர்களும் அதில் கலந்து கொண்டது மகிழ்ச்சி தரத் தக்கது.

**4.** மடாலயப் பேருதவி : குன்றக்குடி யென்றால் திருவண்ணாமலை மடத்தின் நினைவு எவருடைய நெஞ்சிலும் தோன்றும். மிகச் சிறப்புப்பெற்ற இம்மடம் பல நூற்றாண்டுகளாகச் சிறப்புற்றோங்கிச் சைவத்திற்கும், சைவ நிலயங்களுக்கும் திருத்தொண்டுபுரிந்து வருகின்றது. திருவண்ணாமலையிலிருந்து இங்கு எழுந்தருளி வந்த தெய்வசிகாமணி தேசிகர் இம்மடத்தைத் தோற்றுவித்த ஆதி சந்நிதானம். இப்பொழுது நடைபெறுவது 44-வது மகா சந்நிதான ஆட்சி. இவ்வாதீனத்தார் குன்றக்குடி முதலிய 5 தேவஸ்தானங்களுக்கு ஆதீன கர்த்தர்களாயிருக்கிறார்கள். அப்பரமாச்சாரிய சுவாமிகள் சைவ மகாசபை, இங்கே நடத்துவதற்குக் கருணை கூர்ந்து ஆணையிட்டார்கள். ஆதீனத்தில் சின்னப்பட்டமாக எழுந்தருளியிருக்கும் அருணாசல தேசிக சுவாமிகள் இளவயதினர். தமிழிலும், ஆங்கிலத்திலும் தேர்ந்த நிபுணர். சைவத்திலும் ஒழுக்கத்திலும் சிறந்த ஆசிரியர். இப்படிப்பட்ட பெரியார் ஆதீன கர்த்தருடைய ஆணையைப் பெற்று மகா நாட்டிற்குப் பல



வகைகளிலும் பேருதவி புரிந்தார்கள். அவ்வுதவிகள் எழுத்தால் எழுத ஒண்ணாதவை. அவர்கள் முதலிலிருந்து இறுதிவரை முக்கரணங்களாலும் மிக அரிய உதவியை உடனிருந்தே இயற்றினார்கள். அப்படிப்பட்ட உதவி வேறு எவராலும் செய்ய வொண்ணாது.

முதன் முதலாக மகாநாட்டைக் கூட்டுவதற்கு ஆதீனத்துத் திருவோலக்க மண்டபத்தைத் தந்து உதவியது ஒரு சிறந்த செயல். நூற்றுக் கணக்கான சைவமக்கள் அமர்ந்திருந்து சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்கும் வசதி அம் மண்டபம் செய்தது. அது வெகு அலங்காரமாக அமைக்கப் பெற்றிருந்தது. இனி மாநாட்டைத் திறந்து வைத்து மிக அருமையான ஒரு சொற்பொழிவை நிகழ்த்தி மாநாட்டிற்கு ஆசி உரை கூறினது ஆதீனத்து இளைய பட்டத்துத் தேசிக சுவாமிகளே யாவர். அப்பெரியாருடைய நல்லுரையில் மிக அரிய கருத்துக்கள் விளங்கியிருந்தன. தற்கால உலக நிலை, தமிழ்நாட்டு நிலை, சைவர்களின் நிலை, சைவ நிலயங்களின் நிலை, அவைகளில் சிறப்பாக, சைவ ஆதீனங்களின் நிலை, முதலியவைகளை விளக்கமாக எடுத்துக் காட்டி இனிமேல் மக்கள் உய்வதற்கு என்னென்ன வழிகள் உண்டோ அவைகளை யெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். பிறகு மாநாடு நடக்கும் போது, எல்லா நடவடிக்கைகளுக்கும், உடன் இருந்து ஆலோசனை கூறியும் இறுதி நாளில் ஒரு நீண்ட ஆசி உரை உரைத்தும், மாநாட்டைப் பூர்த்தி செய்தார்கள். இறுதி உரையிலும் சைவர்களுடைய கடமையையும், சைவ நிலயங்களின் கடமைகளையும் விரிவாக எடுத்துரைத்தார்கள். தற்கால அமைச்சர் குழாம் இயற்றிவைத்திருக்கும் இந்து சமய நிலையச் சட்டம் எவ்வாறு அகற்ற முடியாத குற்றங் குறைகளைக் கொண்டிருக்கிற தென்றும் விளக்கினார்கள். இந்த வகையில் ஆதீனத்தின் பேருதவி மகாநாட்டிற்கு இருந்தது.

**5.** தலைவர்களும் அவர்கள் திருத்தொண்டும் :— சைவ மகாநாட்டிற்குத் தலைமைவகித்த பெரியார் முன்னைய பிரதமரான ஓமந்தூரார். அவர்களுடைய உரை அச்சடிக்கப்பட்டுள்ளது. அதனைப் படிக்கையில் பல பகுதிகளை விவரமாகப் பெருக்கி உரைத்தார்கள். நாட்டில் சமயக் கொள்கை வேரூன்றி வைப்பது சைவமக்களுடைய சிறந்த

கடமைகளில் ஒன்று என்று வற்புறுத்திப் பேசினார்கள். இறுதிப் பேச்சிலும் அவர்கள் ஆணித்திறம்போல் தம் கருத்துக்களைக் கேட்டோர்மனதில் பதியவைத்தார்கள். சிறப்பாக சமாஜத்தினுடைய அங்கத்தினர்கள் தொகை மிகக் குறைவானதென்றும், சித்தாந்தத்தை ஆதரிப்பவர்கள் மிகக் குறைந்தவர்களென்றும் சொல்லி, சைவத்தில் ஆர்வமுள்ளவர்கள் ஒவ்வொருவரும் சித்தாந்தத்திற்குச் சந்தாதாரர்களாகச் சேரவேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். அப்பேச்சால் சித்தாந்தத்திற்கு ஆதரவும் கிடைத்தது.

எப்போதைப்போல வரவேற்புத் தலைவர் தன்னுடைய சொற்பொழிவை நிகழ்த்தினார். அதிலே எல்லா மக்களையும் அன்போடு வரவேற்றது மட்டுமன்றிச் சைவம் பெருக்குவதற்கு வேண்டிய கருத்துக்களையும் எடுத்துரைத்தார். பிறகு சபையைத் திறந்துவைத்த பெரியார் மற்றொரு நல்லுரை வழங்கினார்கள். பிறகு குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன ஸ்தாபகரான ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக குருமூர்த்திகளின் உருவப் படத்தைத் திருவாளர் சா. கணேசன் அவர்கள் திறந்து வைத்தார்கள். அப்பொழுது பேசிய பேச்சில் குன்றக் குடியிலும் சுற்றிலுமுள்ள சாசனங்களிலிருந்தும் காணக்கூடிய சரித்திரப் பகுதிகளை வெகு நன்றாக எடுத்துரைத்தார்கள். ஆலயங்களின் சிற்பச் சிறப்புகளையும் வருணித்தார்கள். திருவண்ணாமலை ஆதீனம், தமிழ்நாட்டிற்கும், சைவசமயத்திற்கும் இயற்றியுள்ள தொண்டுகளை விரித்துரைத்தார்கள். குருமூர்த்திகளின் உருவப்படம் பிறகு மாநாட்டின்மீது கருணை பொழிந்துகொண்டிருந்தது.

இளைஞர் பேரவையில் பண்டிதர் முத்துவெங்கடாசலம் தலைமை வகிக்கத் திரு. சுந்தரம் அவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார்கள். சைவமங்கையர் பேரவையில் திருமதி. ராஜேசுவரி அம்மையார் தலைமை வகிக்கத் திருமதி. ஆதிலக்ஷ்மி அம்மாள் தொடக்க உரை நிகழ்த்தினார்கள். இந்த முறையில் தலைவர்களுடைய திருத்தொண்டு நிறைவேறியது.

**6.** பேச்சாளர்களும் பேச்சுக்களும் : சைவர் மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சியில் நான்கு பெரியார்கள் பேசினார்கள். நான்குபேரும் செட்டியார்களாகவே ஏற்பட்டசெய்தி குறிக்கத் தக்கது. குடந்தை சிவநேசச் சங்



கத்துத் தலைவர் ஆலயவழிபாட்டைக் குறித்துப் பேசினதும், சித்தாந்த ஆசிரியர், வாதவூரடிகளின் அன்பின் பெருமையைப் பற்றிப் பேசினதும், முன்னர் வெளியிட்ட நிகழ்ச்சி முறையில் இல்லாதவைகள். சைவமக்களின் சேவை வற்புறுத்தப்பட்டது. மூன்றாம் நாளில் திரு. சிவகுருநாத பிள்ளையவர்கள் "சிதைவுற்ற சிவாலயங்கள்" என்ற தலைப்பில் பேசிய பேச்சு கேட்டோர்கள் நெஞ்சை உருக்கிவிட்டது. அன்னார் சிவாலயங்களைப் பற்றி ஒரு சிறந்த ஆராய்ச்சி செய்து பலபடங்களை வரைந்திருந்தார்கள். அப்படங்கள் சபையோருக்குக் காட்டப்பட்டன. அப்படங்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபடுதல் நன்று என்று தலைவரும் சொன்னார்கள். திரு. சாமிநாதன் அவர்கள் பேசிய "நால்வரும் நாமும்" என்பதும், திரு. ஞானசம்பந்தம் அவர்கள் பேசிய "வேண்டாவோ" என்பதும் நிரம்ப சிறந்த சொற்பொழிவுகள். மற்ற சொற்பொழிவுகளும் சிறந்தவையே.

இளைஞர்ப் பேரவையில் இளைஞர்கள் பங்கெடுத்துக் கொண்டதன்றி முதியவர்களும் பங்கெடுத்துக் கொண்ட செய்தியை முன்னமே கூறியுள்ளோம். இனி சைவமங்கையர்ப் பேரவையில் திருமதி. கரும்படுசொல்லி அம்மையார் "சைவம் காத்த மங்கை" என்ற பேச்சில் சாதாரணமாக எல்லா அவைகளிலும் கூறிவரும் சைவ மங்கையர்களைப் பற்றிக் குறிப்பிட்டதேயன்றி கல்வெட்டுகளில் காணும் செம்பியன் மாதேவியாரைப் பற்றியும் கூறியது மிகவும் பொருத்தமாக இருந்தது. புலவர்-திருமதி. குழந்தையம்மையார் "அம்மையின் அருந்தமிழ்" என்று எடுத்துக்கொண்டு புனிதவதி அம்மையின் பாடல் சிறப்புகளை வெகு உருக்கமாக எடுத்துரைத்தார்கள். அம்மையின் பேச்சை அவையோர் மிகவும் பாராட்டினார்கள்.

இரண்டாவதுநாள் இரவு சங்கீதபூஷணம் திரு. சாமிநாதன் குழுவினர் இன்னிசை அரங்கு நடத்தினார்கள். அவையோர்கள் இன்னிசைக்கேட்டு மிகவும் மகிழ்ந்தார்கள்.

**7.** சில சிறப்புக்கள் : தூத்துக்குடி சைவசித்தாந்த சங்கத்தார்கள், ஆதீனத்துச் சின்னப்பட்டத்து சுவாமிகளுக்குக் "குருகேந்திரர்" என்ற பட்டம் வழங்கியுள்ளார்கள். பாலகவி அவர்களுக்கும் மற்றொருபட்டம் வழங்கியுள்ளார்

கள். இவைகளைச் சித்தாந்தக் கிழவனார் திரு. சிவகுருநாத பிள்ளையவர்கள் தனது தள்ளாத வயதிலும் பேரவைக்கு வந்து பட்டங்களை வழங்கினார்கள். அந்தக் காட்சி பெரும் சிறப்பாக இருந்தது.


மேலும், பேரவைகளில் பல வாழ்த்துப்பாக்கள் வாசிக்கப் பெற்றன அவைகளில் ஒன்று ஆதீனத்தார் மகாநாட்டை நடத்தின பேருதவியைக் குறித்து நன்றி பாராட்டும் முறையில் படிக்கப் பட்டது. இவைகள் சித்தாந்தத்தில் வெளிவரும்.

முடிவாக, குன்றக்குடியில் நடைபெற்ற சமாஜத் திருவிழாவும், சைவர் மாநாடும் பயன்படத்தக்கமுறையில் நடந்தது என்று கூறவேண்டும்.


மகாநாட்டிற்கு வந்திருந்த அன்பர்கள் பலரும் அக்கம் பக்கத்திலிருக்கும் பாடல்பெற்ற தலங்களுக்கும் நகரக் கோயில்களுக்கும் சென்று வழிபட்டார்கள்.

**8.** திருவெம்பாவை மாநாடுகள் : சென்ற இரண்டாண்டுகளாகக் காமகோடி ஆதீனத்தார்கள் தமிழ்நாட்டில் சமய உணர்ச்சி உண்டுபண்ணும்பொருட்டு, மார்கழித் திங்களில் "திருவெம்பாவை", "திருப்பாவை", ஆறங்க மாநாடுகள் கூட்டிவருகின்றார்கள். இந்த ஆண்டில் சுமார் 32 நகரங்களில் இப் பேரவைகள் கூட்டப்பெற்று வருகின்றன. இம் மகாநாடுகளில் சமயப் பெரியார்கள் பலர் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அருமையான சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கின்றார்கள். பாசுரங்களைச் சிறப்பாக ஓதும் மக்களுக்கு மடத்தார்கள் தங்க, வெள்ளிக் காசுகளை வழங்கினார்கள். ஆசாரிய சுவாமிகளின் ஆசி உரையும் படிக்கப்பட்டது. 31-12-51-ல் பழனியில் கூடிய மாநாட்டில் சித்தாந்த ஆசிரியர் தலைமை வகித்தார். பல அரிய பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டன. பஜனைகளும் வெகு நன்றாக நடந்தன. தமிழுக்கும், சமயங்களுக்கும் தற்போது ஏற்பட்டிருக்கும் உணர்ச்சி இயக்கம் போற்றத்தக்கதல்லவா ?

---



ஸ்ரீ குன்றக்குடி ஆறுமுகப்பெருமான் திருக்கோயிலும் மலையும்



திருவண்ணாமலை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிகர்



குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
ஆதி தெய்வசிகாமணி தேசிகர்

**2. தலப்பகுதி**

# குன்றக்குடி

(ம. ரா.)

**1.** இடம்: பாண்டிய நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் கூற்றத்தில் உள்ள ஒரு புனிதத்தலம். திருச்சிராப்பள்ளியிலிருந்து மானாமதுரை செல்லும் புகைவண்டிப்பாதையில் உள்ள காரைக்குடி நிலையத்திலிருந்து மேற்கே பத்துக் கல் தொலைவில் இருக்கிறது. மற்றும் செட்டிநாட்டு நிலையத்திலிருந்து மேற்கே எட்டுக் கல் சென்றாலும் இவ்வூரை அடையலாம். ஊரின் இடையில் ஒரு சிறு குன்று உண்டு. அதனைச் சுற்றிலும் நான்கு மாடவீதிகள் இருக்கின்றன. அவ்வீதிகளில் பிரயாணிகள் தங்குவதற்காகப் பல விடுதிகளும் சத்திரங்களும் உண்டு. நான்கு புறங்களிலிருந்தும் இத்தலத்தின் வழியாக விசை வண்டிகள் (பஸ்) செல்லுகின்றன. ஆகவே எளிதாக எவரும் இவ்வூரை அடையலாம். இங்கே இருக்க வசதிகளோடு உணவுச்சாலைகளும் உண்டு.

**2.** தலப்பெருமை: இத்தலம் முருகப் பெருமானுடைய படைவீடுகளில் குன்றுதோறாடல்களில் ஒன்றாக உள்ளது. மலையோ சிறியது. மயிலின் வடிவத்தில் அமைந்துள்ளது. அதன்மீது முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் இருக்கிறது. இக்கோயிலிலிருந்து பார்க்கின் சுற்றிலுமுள்ள நிலத்தின் அமைதி வெகு அழகாகத் தெரியும். அருகில் தேனாறு பாய்கிறது. அதனுடைய செழிப்பும் ஊரைச் சுற்றிலும் உள்ள நான்கு தடாகங்களின் செழிப்பும் நன்கு அமைந்திருக்கின்றன. அவற்றைச் சுற்றித் தென்னை, பனை முதலிய பலமரங்கள் ஆகாயத்தை அளாவி நிற்கின்றன. அத்தோப்புகளின் அமைதியால் ஊர் மிகக் குளிர்ச்சியாகத் தோன்றும். இத்திருத்தலத்தைச் சுற்றிச் சிறிது தொலைவில் செட்டிநாட்டு ஒன்பது நகரக் கோயில்களும் அமைந்திருக்கின்றன. அக்கோயில்களுக்கு நடுவில் மிகச்சிறப்புடனே இந்தச் சிறந்த புனிதத்தலம் வீற்றிருப்பதனால் இதற்கு ஒரு ஒப்பற்ற பெருமை உண்டு. நகரத்தார்கள் இக்கோயிலை மிக அன்போடு பாராட்டி

வருகிறார்கள். அவர்களுடைய விடுதிகளும் இந்தத் தலத்தில் நிரம்ப உண்டு.

இந்தத் தலத்திற்குப் பல பெயர்கள் உண்டு. அவைகளாவன : மயூர நகரம், அரசவனம், கிருஷ்ணநகரம், மயில்மலை, குன்றக்குடி என்பன. இவற்றில் குன்றக்குடி என்பது தற்காலம் பிரசித்தியாய் வழங்குவது. மற்றப் பெயர்களில் மயூரநகரம் என்ற பெயர் மயிலுக்குச் சாபவிமோசனம் ஏற்பட்டதால் வந்ததெனவும், அரசவனம் என்பது அரச மரங்களின் மிகுதிகாரணமாக வந்ததெனவும், கிருஷ்ண நகரம் என்பது கிருஷ்ணபகவான் பாண்டவர்களை இங்கு முருகப்பெருமானை வணங்கச்சொல்லி உபதேசித்ததால் வந்ததெனவும், மயில்மலை என்பது முருகனது மயில் ஒரு சாபவிமோசனத்தால் மலை உருவை உற்றதினால் அப்பெயர் வந்ததெனவும் நூல்கள் கூறும். தற்போது வழங்கும் குன்றக்குடி என்ற பெயர் ஒரு குன்றை தன்னிடத்தே கொண்ட ஊராக இவ்வூர் விளங்குவதால், அப்பெயர் வந்தது.

**3.** கோயில் : இது ஊரின் நடுவில் உள்ள மலையின் மேல் அமைந்துள்ளது. இக்கோயில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று மலைக் கோயில், மற்றொன்று கீழ்க்கோயில். மலைக்கோயிலில் முருகப்பெருமான் ஆறு திருமுகங்களோடு மயில்வாகனத்தில் கிழக்குமுகமாக எழுந்தருளியிருக்கின்றார். இரு புறங்களிலும் வள்ளியம்மையும் தெய்வானையம்மையும் காட்சியளிக்கின்றார்கள். சந்நிதிக்குத் தென்புறத்தில் சலவைக்கற்களால் அழகுறப்பெற்ற அலங்கார மண்டபத்தில் உற்சவமூர்த்தி ஆறு திருமுகங்களோடு மயில்வாகனத்தில் எழுந்தருளியிருக்கின்றார். எதிரே கல் தூண்களால் அமைக்கப்பெற்ற பெரிய மண்டபம் இருக்கின்றது. சுற்றிலும் சாளரங்கள் உண்டு. அவற்றின் வழியாக நாட்டு வளத்தைக் காணலாம். அருமையான தென்றல் எப்போதும் வீசும். மூலத்தானத்தைச்சுற்றிப் பல சிறு ஆலயங்கள் உண்டு. அவற்றில் சிவபெருமான், அம்மை, நால்வர், விநாயகர், தென்முகக் கடவுள், குழந்தை வடிவேலர், கூத்தப்பெருமான், ஒன்பது கோள்கள், சண்டேசுரர் முதலிய மூர்த்திகள் எழுந்தருளியிருக்கிறார்கள். மண்டபத் தூண்களில் பெரிய மருது, சின்ன மருது என்ற



மன்னர்கள் உருவங்கள் அமைந்திருக்கின்றன. மலையின் முன் மண்டபத்தில் வீரபாகுவும் இடும்பனும் இருக்கிறார்கள். நுழைவாயிலில் தோகையடி விநாயகர் என்ற ஒரு அழகிய விநாயகமூர்த்தி எழுந்தருளி யிருக்கின்றார்.

இனி மலையடிவாரத்தில் கீழ்க் கோயிலானது தென்மேற்குத் திசையில் அமைந்திருக்கக் காணலாம். சுவாமியும் அம்மனும் கிழக்கு நோக்கியிருக்கிறார்கள். பெரும்பகுதி மலையைக் குடைந்து உண்டாக்கின குடைவரைக் கோயிலாகும். இக்கோயில் மிகப் பழமைபெற்றது. பல்லவர் காலத்துச் சிற்ப அமைதி பெற்றது. அதிலே பண்டைய கல்வெட்டுகள் உண்டு. இக்கோயிலுக்குத் தெற்கில் மடைப்பள்ளியும், மேற்கில் திருநாள் மண்டபமும் அமைந்துள்ளன.

**4.** மூர்த்திகள் : மலைக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள் ஆறு முகங்களோடு அருள் வழங்குவதால் ஆறுமுகக்கடவுள் என்னப்படுவர். கீழ்க்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமான் தேனாற்று நாதர் அல்லது தேனாறுடைய பெருமான் என்று வழங்கப் படுகின்றார். கல் வெட்டுகளிலும் இப் பெயர் காணப்படுகின்றது. மூர்த்தி சுயம்பு. அகத்தியரால் வழிபாடு செய்யப் பெற்றதாய் புராணம் கூறும். அம்மையின் பெயர் அழகம்மை. மற்ற மூர்த்திகளைப் பற்றி மேலே கூறியிருக்கின்றோம்.

**5.** ஐதீகங்கள் : தலபுராணத்தின்படி முருகக் கடவுளினுடைய ஊர்தியாகிய மயில் சாபவிமோசனம் பெற்றுச் சாரூப்ய பதவி அடைந்ததாம். மேலும் கிருஷ்ணன், வசிஷ்டர், விசுவாமித்திரர், அகத்தியர், பிரமன், கருடன், இந்திரன், சூரியன், மன்மதன், பாண்டவர், நாரதர், இடும்பன் முதலியோர்கள் வழிபட்டுப் பேறு பெற்றார்களாம். கலிங்க தேசத்து இடும்பன் என்ற அசுரன் வயிற்றுவலியால் வருந்தி மயில்மலை முருகப்பெருமானிடம் அன்புகொண்டு கிரௌஞ்ச கிரியைக் காவடியாகக் கொண்டு வந்து வலி நீங்கி இங்கேயே இருக்கிறானாம்.

**6.** தீர்த்தங்கள் : இம்மலையைச் சுற்றிப் பலதீர்த்தங்கள் உண்டு. அவைகளில் சிறந்தவை சரவணப்

பொய்கை, மயில் தீர்த்தம், சக்திதீர்த்தம், பாண்டவ தீர்த்தம், தேனாறு, சண்முக நதி என்பன. மலைக்குத் தென்மேற்கில் உள்ளது சரவணப்பொய்கை. மேற்கில் உள்ளது பாண்டவ தீர்த்தம். கிழக்கே அரைக்கல் தொலைவில் உள்ளது தேனாறு. அகஸ்தியர் தாம் வழிபட்ட சிவலிங்கத்திற்கு முழுக்காட்டிய தேன் ஆறாகப் பெருகி ஓடியதாக ஐதீகம் கூறும். தேனாறு என்ற பெயர் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது.

**7.** சுற்றுக் கோயில்கள் : வீரமாகாளியம்மன் கோயில் அடுத்து இருக்கின்றது. இதில் உற்சவங்களும் நடைபெறும். மேலும், இந்தத் தலத்தில் எழுந்தருளியிருக்கும்படியான திருவண்ணாமலை ஆதீனத்தின் பராமரிப்பில் ஐந்து கோயில்கள் உண்டு. அக்கோயில்கள் ஐந்து கோயில் தேவஸ்தானம் என்ற பெயராலேயே வழங்குகின்றன. அக்கோயில்களாவன : குன்றக்குடி, திருப்புத்தூர், பிரான்மலை, திருக்கோலக்குடி, காளியம்மன் கோயில்களாகும். இவற்றின் நிர்வாகம் திருவண்ணாமலை ஆதீன கர்த்தர்களாலே நடைபெற்று வருகின்றது. இம்மடத்திற்கு ஆதி பரமாசாரியர் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி தேசிகராவர். தற்போது அதிகாரத்தில் உள்ளவர் நாற்பத்து நான்காவது சன்னிதானமாகும்.

**8**. சிற்பங்கள் : கீழக் கோயில் மலையைக் குடைந்து அமைக்கப்பட்டது. மலையிலேயே ஆக்கப்பட்ட ஐந்து சிவலிங்கங்கள் உள்ளன. மலைக்கொழுந்தீசர் சந்நிதியில் அழகிய பல உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் துவார பாலகர்கள், வலம்புரிவிநாயகர், மும்மூர்த்திகள், துர்க்கை, சங்கர நாராயணர் முதலியன சிறந்தன. அவற்றில் கூத்தாடு தேவரின் சிலை மிக அழகாகக் கண் கவரத்தக்க முறையில் அமைந்திருக்கிறது. பெரிய திருநாள் மண்டபங்கள் இரண்டு தற்கால முறையில் அமைந்திருக்கின்றன. குடைக் கோயிலின் சுவர்கள், மேல் தளம் கீழ்த்தளம், தூண்கள் முதலியவைகள் வெகு நன்றாக ஆக்கப்பட்டிருக்கின்றன. மலைக்கோயிலிலோ வேலைப்பாடு சாதாரணமானது. மருது வீரர்களின் உருவங்கள் குறிப்பிடத்தக்கன. கண்டரமாணிக்கம், பெரி. சோமசுந்தரம்



செட்டியார், **1939**-ல் பழுது பார்த்துக் கும்பாபிஷேகம் செய்தார்.

**9.** பாடல்கள் : இவ்வாலயத்தைப் பற்றித் தென்மொழியிலும், வடமொழியிலும் புராணங்கள் உண்டு. அருணகிரி நாதர் திருப்புகழ் அருளிச் செய்திருக்கின்றார். "பிறர் புகழின் சொற்பயிலும்" என்பது அவர் திருப்புகழ். மயூரகிரிக் கலம்பகம், மயூரகிரிக் காதல், சண்முக நாதர் உலா, மயூரகிரிக் கோவை, மயூரகிரிப் பிள்ளைத்தமிழ், முதலிய பல பிரபந்தங்களிருக்கின்றன. தனிப்பாடல்களும் பல உண்டு.

**10.** கல்வெட்டுக்கள் : குன்றக்குடிக் கோயிலிலும் அருகில் உள்ள பிள்ளையார் பட்டி, குன்றக்குடி முதலிய கோயில்களிலும் நிரம்பக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளைக் கொண்டு செட்டி நாட்டின் பண்டைய வரலாறு நன்றாக ஆராயக்கூடும். குன்றக் குடியைப் பற்றி இவ்வூர் கோயிலே யன்றி, பொன்னமராவதி, குன்றாண்டார் கோயில், தென்காசி முதலிய கல்வெட்டுக்களிலும் காணலாம். குன்றக்குடி கோயிலில் மட்டும் 21 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் 6 கல்வெட்டுக்கள் குலோத்துங்கச் சோழனுடையவை. மற்றவை பெரும்பாலும் பாண்டியருடையவை. இவைகளைக் கொண்டு குலோத்துங்கச் சோழன் காலத்தில் சோழர்களுடைய ஆதிக்கம் குன்றக்குடி வரைக்கும் சென்றிருந்தது என அறியலாம். அதற்குப் பிறகு பாண்டியர்கள் வசம் இந்நாடு சேர்ந்துவிட்டது. கிடைத்திருக்கும் கல்வெட்டுக்கள் 12ம் நூற்றாண்டு முதல் 15-ம் நூற்றாண்டு வரை பரவியிருக்கின்றன. பல்லவர் காலத்துச் சான்றுகள் கிடைக்காமற் போனபோதிலும் குடைவரைக் கோயிலில் ஒரு தூணில் வட்டெழுத்தில் ஒரு தனிச் சொல் எழுதப்பட்டுள்ளது. அது "மாசிலீச்சுரம்" என்பது. பண்டைக் காலத்தில் இக்கோயிலின் பெயர் மாசிலீச்சுரமாக இருக்கலாம். இந்நாட்டின் பெயர் ராஜ ராஜ பாண்டிய நாடு என்றும், உள்நாடு, ஸ்ரீராஜேந்திரச் சோழ வளநாடு என்று சோழர் காலத்திலும், கேரள சிங்க வளநாடு என்று பாண்டியர் காலத்திலும் வழங்கி வந்தது. மற்றும் அவ்வள

நாட்டில் அதலையூர் நாட்டில் குன்றக்குடி இருப்பதாகவும், அதிலுள்ள கோயில் திருமலையுடைய தேனாற்று நாயகர் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வூர் நிலங்களுக்குத் தேனாற்றுப் பாய்ச்சல் இருந்ததாகவும், கோயிலுக்குப் பல தானதருமங்கள் செய்யப்பட்டன என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

மலைக்கோயிலுக்குப் பின்னால் ஞானியார் மடம் என்று தற்போது வழங்குகிற ஓர் இயற்கைக் குகையில் பிராம்மி எழுத்தில் ஒரு கல்வெட்டு இருக்கின்றது. இக்குகையில் பாண்டவர் படுக்கைகள் என்ற சமணர் படுக்கைகள் இருக்கின்றன. தற்போது இக்குகையில் நாகர், அனுமான், ஞானியார் உருவங்கள் இருக்கின்றன.

திருப்புத்தூர் முதலிய கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களின்படி 14-ம் நூற்றாண்டில் முகமதியப் படையெடுப்பினால் சூரைக்குடி அழிந்ததும், அதனை விஜயாலயத் தேவன் திருப்பணி செய்ததும் அறிகிறோம்.

---

ஆராய்ச்சிப் பகுதி

# பண்டைச் சைவர் இல்லற வாழ்க்கை

(டாக்டர் மா. இராசமாணிக்கம், சென்னை)

மணவாழ்க்கை: மனைவி கணவற்குத் துணைவி; கணவன் மனைவிக்குத் துணைவன்[1]. கணவனும் மனைவியும் மனமொத்த இல்லறத்தை நடத்தி வந்தனர். கணவன் மனைவியின் யோசனைப்படியே வீட்டுக்காரியங்களைச்செய்து வந்தான் என்பது சிறுத்தொண்டர், இளையான் குடிமாறர், இவர்தம் வரலாறுகளிலிருந் தறியலாம். [2]மனைவி கணவன் அருகிலிருந்து உண்பித்தல் வழக்கம். [3]கணவன் செய்யும் சிவத் தொண்டுகளுக்கு மனைவி ஆதரவளித்தல் வழக்கம். இதற்கு நமிநந்தியடிகள் போன்ற நாயன்மார் வரலாறுகளும், பல்லவ சோழ அரசர்கள் வரலாறுகளும் ஏற்ற சான்றாகும். இராஜராஜன் I தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிப் பல நிவந்தங்கள் விட்டபொழுது அவனுடைய தமக்கை, மனைவிமார் ஆகியோரும் அதே கோயிலுக்குப் பல அறங்கள் செய்தனர் என்பதும், செம்பியன் மாதேவிச் சிவன் கோவிலுக்குச் செம்பியன் மாதேவியாருடைய மருமக்கள் (Daughters-in-law) அனைவரும் அறங்கள் செய்தனர் என்பதும் சைவக் குடும்பத்தின் ஒரு மனப்பட்ட சமயப் பற்றை நன்கு விளக்கும் சான்றுகள் ஆகும். கணவன் ஒழுக்கம் கெட்டவனாயின் மனைவி அவனை அறவே வெறுத்தாள் என்பது திருநீலகண்டர் வரலாற்றிலிருந் தறியலாம். கணவன் சமயத்தில் அழுத்தமான பற்று அற்றவனாயினும்[4] மனைவியின் சிவத் தொண்டுக்கு ஊறு செய்யவில்லை என்பது காரைக்காலம்மையார் வரலாற்றாலும் நன்கறியலாம்.[5] சமணனான கணவன் அறியாது சிவபூசை செய்த மனைவியார் மங்கையர்க்கரசியார் ஆவர்.[6] ஆயினும் இம்மனைவியர் தம் கணவரை முழு அன்புடன் நேசித்தனரே அன்றி வெறுத்திலர்.[7] சிவபூசையில் கணவனுடன் ஒத்துழைத்தாற் போலவே, அடியார்களை உபசரித்தலிலும் மனைவி கணவனுடன் ஒத்துழைத்தாள். பரவையார் சேரமான் பெருமானை வரவேற்றுபசரித்தது பெரியபுராணத்திற் படித்து இன்புறத்தக்க பகுதியாகும்.

"பொங்கு விளக்கும் நிறைகுடமும் பூமாலைகளும் புகையகிலும்
எங்கும் மடவார் எடுத்தேத்த அணைந்து தாமும் எதிர்கொண்டார்"

"சோதி மணிமா ளிகையின் சுடரும் பசும்பொற் காலமளி
மீது பெருமாள் தமையிருத்தி நம்பி மேவி யுடனிருப்பக்
கோதில் குணத்துப் பரவையார் கொழுநனார்க்கும் தோழர்க்கும்
நீதி வழுவா வொழுக்கத்து நிறைபூ சனைகள் முறையளித்தார்"[8]

---

1. சேரமான் பெருமாள் புராணம் செய். 72
2. சிறுத்தொண்டர் புராணம். செய். 12, 17, 55—63 ; 11-23
3. காரைக்கால் அம்மையார் புரா. 22
4. செய்யுள். 3 - 6. 5. செய்யுள் 13 - 21.
6. சம்பந்தர் புரா - செய். 604.
7. காரை. அம்மையார் புரா - செ 49 ; மங்கையர்க்கரசியார் புரா. செய். 2
8. சேரமான். புரா. செய். 70 - 1.

சிவனடியாரை உண்பித்தல் : முதலிற் சிவனடியார் பாதங்களை இல்லத்தலைவி நீர்வார்க்கக் கணவன் நீராட்டி,[9] அந்நீரைத் தங்கள் தலையில் தெளித்துக் கொள்வர் ; உள்ளும் கொள்ளுதல் உண்டு.[10] பிறகு உணவு தயாரிக்கப்படும். முதலிற் கறிகள், குழம்பு, ரஸம் என்பன தயாரித்த பிறகே இறுதியில் சோறு சமைக்கப்படும்.[11] சோறு சூடாக இருத்தல் நலமாதலின், இம்முறை கையாளப் பட்டது போலும் ! அடியவர்க்கு அமுது படைக்கும் இடம் பசுவின் சாணத்தால் மெழுகப்படும் ; கோலமிடப்படும் ; தீபம் ஏற்றி வைக்கப்படும். அங்கு நீண்ட வாழை இலை கழுவி, அறுத்தவாய் வலம்பெற வைக்கப்படும். அடியவர் விருந்துண்ணுமுன் இலைக்கு எதிரில் பீடத்தில் அமர்ந்து, ஐந்தெழுத் தோதித் திருநீறணிந்து, பிறகு வீட்டுத்தலைவன் தலைவியர்க்கும், பிறகு பிள்ளைகளுக்கும் நீறு தந்து பூசிக் கொள்ளச் செய்வர்,[12] அடியவர் கையை நன்னீராற் கழுவி உணவுண்ணத் தொடங்குவார். அவர் விருப்பப்படி வீட்டுத் தலைவனும் மக்களும் உடனுண்பர். வீட்டு அம்மையும் பிறரும் அமுது படைப்பர்.[13]

மனைவியார் ஒழுக்கம் : அக்காலப் பெண்கள் அவசியம் நேரும்பொழுது கணவர் பெயரைக் கூறி வந்தனர் என்பது இயற்பகையார் வரலாற்றிலிருந்து தெரிகிறது.[14] கணவன் செயல் உலக இயற்கைக்கு மாறுபட்டதாயினும் சமயச் சார்புடையதாயின், மனைவி மகிழ்ச்சியுடன் கணவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தாள் என்பதற்கு இயற்பகையார் மனைவியாரே ஏற்ற சான்றுவார்.[15]

பெயரீடு : சிறுத்தொண்டர் தாம் வழிப்பட்ட சீராளதேவர் பெயரையே தம் மைந்தற்கு இட்டார் ; அப்பூதி

9. கலிக்காமநாயனுர் புரா. 5.
10. அப்பூதி அடிகள் நாயனுர் புரா. செய். 20.
11. இளையான் குடிமாற நாயனுர் புரா. செ. 22.
12. அப்பூதியடிகள் புரா. செ. 31.
13. ஷை செ. 39 - 41.
14. செய். 16.
15. செய். 8 - 9.



யடிகள் தமது ஆசிரியராகிய திருநாவுக்கரசர் பெயரையே தம் பிள்ளைகட் கிட்டார். இவற்றிலிருந்து சைவர்கள் தங்கள் பிள்ளைகட்குத் தங்கள் இஷ்டதெய்வங்களின் பெயர்களை அல்லது தம் சமயப் பெரியாரின் பெயர்களை வைத்தல் மரபென்பது தெரிகிறது.

சைவக்குடும்பம்: பல்லாற்ருலும் சிவத்தொண்டில் கருத்து ஒருமித்து வாழ்ந்த சைவத் தம்பதிகட்குப் பிறந்த குழந்தைகளும் சிவத்தொண்டில் உறைந்த உள்ளமுடையராய் இருந்தனர் என்பதற்கு அப்பூதியடிகளின் மூத்த மைந்தனே ஏற்ற சான்றுவன்.[16] இராஜராஜன் I பெரிய சிவபக்தன் ; அவன் தேவாரத்தை முறைப்படுத்தக் காரணமாக இருந்தான். அவன் மகன் அத்தேவாரத்தை ஓதும் ஓதுவார்களைக் கவனிக்கத் தேவார நாயகம் என்ற அரசாங்க உத்யோகஸ்தனை நியமித்திருந்தான். இவ்வாறே முதற் குலோத்துங்கன் தில்லையில் தொடங்கிய திருப்பணிகளை அவன் மகனுன விக்கிரம சோழனும் அவனுக்குப்பின் வந்த அவன் மகனுன இரண்டாம் குலோத்துங்கனும் தொடர்ந்து முடித்தனர். இரண்டாம் குலோத்துங்கன் பெரிய புராணம் பாடக் காரணமாக இருந்தான். அவன் மகனுன இரண்டாம் இராசராசன் பெரிய புராண நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பாமரரும் அறிந்து அறிவு பெறும்படி தாராசுரம் கோவிலிற் சிற்பங்களாகச் செதுக்குவித்தான். இத்தகைய சைவக் குடும்பங்களாற்ருன் அக்காலத்தில் சைவசமயம் நன்கு வளர்ச்சி அடைந்தது.

உடன்கட்டை ஏறலும் கைம்மை வாழ்க்கையும் : அப்பரது தந்தையார் இறந்ததும், தாயார் சுற்றத்தாரையும் மக்களையும் (அப்பரையும் அவர் தமக்கையார் திலகவதியம்மையாரையும்) துகளாக மதித்து உடன் கட்டை ஏறினுர். இதனைச் சேக்கிழார், "கற்புநெறி வழுவாமற் கணவனுருடன்சென்ருர்"[17] என்று குறித்தார். இவ்வாறு உடன்கட்டை ஏறல் சோழர் காலத்தும் வழக்கமாக இருந்தது. சுந்தரசோழன் இறந்ததும் அவன் மனைவியும் இராச ராசன் I தாயுமான வானவன் மாதேவி உடன்

16. செய். 24 - 6. 17. அப்பர் புரா. செ. 28.

கட்டை ஏறினாள்.[18] மணம் நிச்சயமாகி மணம் நிறைவேறுமுன், கணவனாக வரவேண்டியவன் இறந்தாலும் மணப் பெண் இறத்தலும் வழக்கமாக இருந்ததென்பது திலகவதியார் வரலாற்றால் தெரிகிறது.[19] பெற்றோரும் அற்ற நிலையில் தம்மைத் தனியே விட்டு இறத்தலாகாதென்று அப்பர் அழுது வேண்டத் திலகவதியார் இறவாது, கைம்மை நோன்பை மேற்கொண்டு, திருவதிகையிற் குடியேறிக் கோவில் தொண்டிற் காலங் கழிக்கலானார்.[20] கலிக்காமர் மனைவியார் கணவருடன் இறக்கத் துணிந்தவர், சுந்தரர் தம் கணவரைக் காண வருகிறார் என்றவுடன், சாவதை விடுத்து, கணவரை இழந்த நிலையில் தாம் அவரை வரவேற்றல் முறையன்றாதலின், சிறந்த அவ்வடியார்க்குத் தம் ஆட்களைக் கொண்டு சிறந்த வரவேற்பளித்தார்.[21] இவ்வாறே சோழர் காலத்தில் கணவனை இழந்த செம்பியன் மாதேவியார் அளவரிய சிவத் தொண்டுகளில் ஈடுபட்டார்; கணவரைச் சிவலிங்கமாகக் கருதிப் பூசித்து வந்தார். அதனைக் குறிக்கும் சிற்பம் செம்பியன் மாதேவியில் உள்ள சிவன் கோயிலிற் காணலாம்.[22] திருநல்லூரிற் கணவனை இழந்த பெண்மணி ஒருத்தி தத்தன் உடையார் ஈசான சிவாசாரியார் என்பவரிடம் சமய போதனை பெற்று வந்தாள்; அக் குருவிற்குத் தன் கணவர் விருப்பப்படி மடம் கட்டிக்கொடுத்து நிலமும் அளித்தாள்.[23]

---

**ஆராய்ச்சிப் பகுதி**

# ஒன்பது கோள்கள்

(ம. ரா.)

தமிழ் நாட்டில் எந்த சிவாலயம் சென்றாலும் அதில் நவக்கிரக மண்டபம் என்று ஒரு மண்டபம் காண்போம். அது பெரும்பாலும் மூலஸ்தானத்தின் வடகிழக்கு மூலை

18. 236 of 1902; திருவாலங்காட்டுப் பட்டயம். செய். 65—6.
19. அப்பர் புரா. செ. 32. 20. ஷை செ. 34, 41—4.
21. எயர்கோன்கலிக்காம நாயனார் புரா. செய். 398—400.
22. சோழர் கோயிற் பணிகள் பக். 33.
23. A. R. E. 1909, p. 75.



யில் அமைந்திருக்கும். அது மூன்றடி மேடை உள்ளதாய் அதன்மீது ஒன்பது உருவங்கள் வைக்கப் பெற்றதாய் இருக்கும். அவ்வுருவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திக்கை நோக்கியிருக்கக் காணலாம். இவ்வுருவங்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது என்ற பெயர்கொண்ட ஒன்பது கோள்கள். சோதிட நூலின்படி இந்த ஒன்பது கிரகங்களும் மனிதனைப் பீடிக்கக் கூடியவைகள். ஆகவே இவைகளைத் தொழுது வயப்படுத்திக் கொள்ள மக்கள் எண்ணி ஆலயத்திற்குச் சென்று சுவாமி அம்மன் இவர்களைத் தொழுதவுடன் இக் கிரகங்களையும் தொழுவார்கள். இது தமிழ் நாட்டில் இக்காலத்தில் நிகழும் செய்தி. இந்நவக்கிரகங்களில் சில ஊர்களில் சில கிரகங்கள் சிறப்பாக இருக்கும். அவைகளுக்கு அங்கே முக்கியதை உண்டு. உதாரணமாகத் திருநள்ளாற்றில் சனிக்கு மிகவும் சிறப்பு. அங்கே சனிப் பூசை சிறப்பாக நடைபெறும். சூரியனார் கோயிலில் சூரியனுக்குச் சிறப்பு. வைத்தீசுவரன் கோயிலிலே செவ்வாய்க்கே சிறப்பு. இவ்வாறு பேதங்கள் உண்டு.

வான நூலின்படி சூரியனைச் சுற்றி எட்டுப் பெரிய கிரகங்களும் பல சிறிய கிரகங்களும் சுற்றுகின்றன. இக் கிரகங்களைச் சூரியன் இழுத்துப் பிடித்தும் மற்றவைகள் சூரியனை இழுத்துக் கொண்டும் சுழல்கின்றன. சந்திரன் பூமியின் உபக்கிரகம். பூமிதான் சரியான கிரகம். ஆகவே சூரியனைச் சுற்றும் கிரகங்கள் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன் என்பன. மற்றும் புளூடோ முதலிய சிறு கிரகங்களும் உண்டு. சூரியன் கிரகம் அல்ல. நட்சத்திர வகையில் சேர்ந்தது. யூரேனஸ், நெப்டியூன் என்ற இரண்டும் வெறுங் கண்ணுக்குத் தெரியாது. சோதிடத்தில் கூறும் ராகு, கேது என்பவைகள் சந்திரனின் சலன வீதி நிலைகள் ஆகும். நாம் வசிக்கும் பூமி சூரியனைச் சுற்ற ஒரு வருடம் அல்லது $365\frac{1}{4}$ நாள் ஆகும். ஆகாய வீதி 360 பிரிவுகளாகப் பிரித்து அதில் 30 பிரிவுகளுக்கு ஒரு இராசியாக 12 இராசிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் மாதங்கள் ஆகும். சந்திரன் 27 நாட்களில் ஆகாயத்தைச் சுற்றுவதாகத் தெரியும். அக்கணக்கின்படி ஆகாயத்தில் 27 நட்சத்திரங்கள்

அல்லது நாள்கள் தோன்றும். இந்த வகையில் வான நூலுக்கும் சோதிடத்திற்கும் ஒற்றுமை வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

இது இப்படி இருக்க, ஒரு நாள் ஒரு புரோகிதர் ஒரு கேள்வி எழுப்பினார். கோயில்களிலே நவக்கிரகம் வைக்கப்பட்டிருக்கும் முறைகள் ஒரே மாதிரி இல்லை. பற்பல கோயில்களில் பலவிதமாக இருக்கின்றன. மற்றும் வைதீக முறை வேறாகவும் ஆகம முறை வேறாகவும் இருக்கிறது. எந்த முறை சரியானது? ஆகமம் என்ன கூறுகிறது? என்று கேட்டார். அவருக்குச் சில நூல்களில் கண்ட விதிகள் காட்டப்பட்டன. மற்றும் உள்ள வகைகளைப் பார்க்க வேண்டும் என்றார். அந்த வினவிற்கு விடை காண்பதற்காகத்தான் இந்தக் கட்டுரை எழுதப்பட்டது. இதனை நன்கு ஆராய்ந்து அன்பர்கள் தங்கள் கருத்துக்களைச் சான்றுகளோடு எழுதுவார்களாக.

இதனை விளக்கும் பொருட்டுச் சில நூல்களில் கண்ட கருத்துக்களை இங்கே எழுதுவோம் :

ஆலய நிர்மாண ஆராய்ச்சியாளர்கள் சிவாலய ஒழுங்கைப் பற்றிக் கூறுகையில் பண்டைக் காலத்தில் மூலஸ்தானத்தில் சிவலிங்கம் ஒன்றே வழிபடும் தெய்வமாக இருந்தது என்பர். பின்னாலே அம்மன் வடிவம் கர்ப்பக்கிருகத்திலேயே ஏற்பட்டது. திருக்காம கோட்டி நாச்சியார் என்ற பெயர் அம்மைக்கு ஏற்பட்டது என்பர். தனியாக அம்மன் கோயில் பண்டைய நாளில் இருக்கவில்லை. சோழர்கள் காலத்தில் தான் தனியம்மன் கோயில் ஏற்பட்டது. பெரும்பான்மையான கோயில்களில் சுவாமியின் மூலஸ்தானத்தில்தான் பண்டைக் கல்வெட்டுக்கள் உண்டு. அம்மன் கோயில்களில் இல்லை. இதுவே அந்தக் கருத்தை நிரூபிக்கும். இனி நவக்கிரக உருவங்கள் முன்னாளில் இல்லை. அண்மையிலேதான் அவைகள் தோன்றின. இந்த ஆராய்ச்சி பெரும்பாலும் ஒத்துக் கொள்ளப்படுகிறது. அனேக பழைய ஆலயங்களில் நவக்கிரக மண்டபங்கள் சமீபத்தில் தான் கட்டப்பட்டன. ஆகவே, எங்கு இடம் கிடைத்ததோ அங்கே நவக்கிரகங்கள் வைக்கப்பட்டன. ஆகவே வெவ்வெறு கோயில்களில் வெவ்வேறாக அமைந்திருத்தல் இயல்பே. திருப்பேரூரில் நவக்கிரகங்கள் சில



ஆண்டுகளுக்கு முன் முதல்பிரகாரத்தில் இடது புறமாக இருந்தது. தற்போது அவை வெளிப்பிரகாரத்துக்கு வந்துவிட்டன. இவ்வாறு மாறுதல் ஏற்படுவது எங்கும் சகஜமே.

இனி, நவக்கிரகங்கள் வைக்கப்படும் முறையைப் பற்றி மற்றொரு கருத்து உண்டு. ஏன் நவக்கிரகங்கள் கோயில்களில் வைக்கப்பட்டன என்பதற்கு அதுவே காரணமும் காட்டுகிறது. ஓர் ஆலயம் புதிதாக நிர்மாணித்துத் தாபிதம் செய்யப்பட்டபோது கிரகங்கள் எந்த நிலையில் இருந்தனவோ அந்த நிலையிலே நவக்கிரகங்கள் வைக்கப்பட்டன என்பது அந்தக் கருத்து ஆகும். இது உண்மையானால் ஒவ்வொரு ஆலயத்திலும் வெவ்வேறு விதமாக கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கும். அவ்வாறு எல்லா இடங்களிலும் இல்லை. மேலும் பின் காலத்தில் வைக்கப்பட்ட நவக்கிரக மேடைகளில் எந்த முறை அனுசரிக்கப்பட்டது, முதலில் தாபிதம் ஆன நிலை தெரியாத இடங்களில் எவ்வாறு வைக்கப்பட்டன என்ற கேள்விகள் தோன்றும். இது உண்மை. ஆனால் ஓர் ஆராய்ச்சிக்கு இது அனுகூலமாக இருக்கும். அது யாதெனில் ஒரு கோயில் எப்போது கட்டப்பட்டது என்று எளிதில் அறியக்கூடும். அவ்வித அமைப்பு எந்தக் கோயில்களில் உண்டு என்பதை அறிந்தால் அன்பர்கள் தெரிவிப்பார்களாக.

நமது புராணங்களில் நவக்கிரகங்களில் சூரியன் முதல் கிரகம். அவனைச் சுற்றிலும் மற்ற கிரகங்களைப் பிரதிட்டை செய்வார்கள். சூரிய வழிபாடு உலகத்திலே மிகப் பழமையானது. பாரதநாடு மட்டிலும் அன்றிப் பாரசீகம் பண்டைய அமெரிக்கா முதலிய நாடுகளில் சூரிய வழிபாடு இருந்தது. கிரேக்க உரோம எகிப்துப் பண்டைச் சமயங்களிலும் சூரிய வழிபாடு இருந்தது. சூரியனுக்குக் கோயில்கள் இருந்தன. பாரத நாட்டில் சூரிய வழிபாடு தனித்த வகையில் குறைந்து விட்டது. காஷ்மீரத்தில் மிகப் பிரபலமான சூரிய ஆலயம் இருந்தது. தற்போது அது அழிவு நிலையில் இருக்கிறது. இருந்தாலும் மிகக் கம்பீரமானது. அதன் பெயர் மார்த்தாண்டர் கோயில். உத்கல நாட்டில் (ஒரிசா) கோனாரகம் என்ற இடத்தில் ஒரு சூரியன் கோயில் இருக்கிறது. அதுவும் அழிவு நிலையில் இருக்கிறது. தெற்கே சோழ நாட்டில் சூரியனார் கோயில் என்ற

ஒரு சிறந்த கோயில் இருக்கிறது. அது பாடல்பெற்றதன்று. ஆகவே பண்டைப் பெருமை பெற்றதன்று. என்றாலும் அதற்கு தனிப் பெருமை உள்ளது அல்லவா? பாரத நாட்டில் முதல் இடை கடைப் பகுதிகளில் இவ்வாறு சூரியனார் கோயில் இருப்பதே ஒரு முறை பற்றியோ என்று ஆராய்க.

தஞ்சைச் சூரியனார் கோயில் குலோத்துங்கச் சோழன் காலத்தில் (1060-1116) கட்டப்பட்டு, குலோத்துங்கச் சோழ மார்த்தாண்டாலயம் என்ற பெயரால் வழங்கி வந்தது. இனி சூரியன் கோயில்களில் கிரகங்கள் அடியிற் கண்ட முறையில் வைக்கப்பட்டிருக்கின்றனவாம். நடுவில் சூரியன், கிழக்கே - திங்கள், தென்கிழக்கே - செவ்வாய், தெற்கே-குரு, தென்மேற்கே-ராகு, மேற்கே-வெள்ளி, மேற்கே – கேது, வடக்கே - புதன், வடகிழக்கே - சனி. இந்த வகையில் கிரகங்கள் அமைக்கப் பட்டால் கோயில் கட்டின காலத்தில் இருந்த கிரக அமைப்பைப் போல அமைக்கப்பட்டிருக்க வில்லை என்பது தெளிவு. அதைக் கொண்டு கிரக நிலையும் கட்டட நாளும் அறிய முடியாது அல்லவா? இதனுடைய உண்மைப் பொருள் என்ன? புராணங்களிலே சூரியனைப் பற்றி இன்னும் பல விவரங்கள் இருக்கின்றன. அவைகளை இங்கே குறிக்க வேண்டியதில்லை.

இறைவனுக்குத் தசாங்கங்கள் கூறப்படுவதுபோல நவக் கிரகங்களுக்கும் கூறப்படும். சிலவற்றைமட்டும் இங்கே கூறலாம்.

| கோள் | நிறம் | ஆயுதம் வலதுகை | ஆயுதம் இடதுகை | | ஊர்தி |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | வெள்ளை | தாமரை | தாமரை | 7 | பரித்தேர் |
| திங்கள் | வெள்ளை | குமுதம் | தாமரை | 10 | பரித்தேர் |
| செவ்வாய் | சிகப்பு | | கமண்டலம் | | ஆடு |
| புதன் | மஞ்சள் | | யோகமுத்திரை | | சர்ப்பம் |
| வியாழன் | மஞ்சள் | அக்ஷமாலை | கமண்டலம் | | அன்னம் |
| வெள்ளி | வெள்ளை | அக்ஷமாலை | கமண்டலம் | | தவளை |
| சனி | கருப்பு | | தண்டம் | | காகம் |
| ராகு | புகைநிறம் | | காம்பின் அடிப்பகுதி | | குண்டம் |
| கேது | புகைநிறம் | | கூப்பிய கைகள் | | |



சூரியனார் கோயிலில் சூரியன் மூலஸ்தானம். மேற்கு சன்னதி; எதிரே குரு; மற்ற கிரகங்கள் சுற்றிலும் உள்ளன. ஆந்திர நாட்டில் சூரிய நாராயணர் கோயில்கள் உண்டு. நாராயணர்களே சூரியனாக அங்கே வழிபடப் படுவதுண்டு. சளுக்கிய ஹொய்சள கோயில்களிலும் இந்த முறை வழிபாடு உண்டு.

இனி மனிதனுடைய தசைகளைக் கூறும் சோதிட நூல் அடியிற் கண்டவாறு பிரிவினை செய்கிறது.

| கோள் | ஆண்டு | நாள் | வீடு |
|---|---|---|---|
| 1. கேது | 7 | அசுவனி, மகம், மூலம் | மேடம், சிங்கம், தனுசு |
| 2. வெள்ளி | 20 | பரணி, பூரம், பூராடம் | ... |
| 3. ஞாயிறு | 6 | கிருத்திகை, உத்திரம், உத்திராடம் | இடபம், கன்னி, மகரம் |
| 4. திங்கள் | 10 | ரோகிணி, அத்தம், ஓணம் | ... |
| 5. செவ்வாய் | 7 | மார்கழி, சித்திரை, தவிகம் | மிதுனம், துலாம், கும்பம் |
| 6. ராகு | 18 | திருவாதிரை, சுவாதி, சதயம் | — |
| 7. குரு | 16 | விசாகம், பூரட்டாதி, புனர்பூசம் | கடகம், விருச்சிகம், மீனம் |
| 8. சனி | 19 | பூசம், அனுஷம், உத்திரட்டாதி | — |
| 9. புதன் | 17 | ஆயில்யம், கேட்டை, ரேவதி | — |
| | 120 | 27 | 12 |

இந்த முறை மனிதனுக்கு இருந்தால் கோயிலுக்கும் உண்டா என்பது ஒரு கேள்வி. இந்த முறையில் கோயில்களில் வைக்கப்பட்டுள்ளனவா?

இனி நவக்கிரகவாதி மதம் என்ற ஒருமதமும் உண்டு. அதில் நவக்கிரகங்களால் ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களும் நடக்கப்படும் என்றும் இவைகளால் சுகாசுகம், ஆயுள், மரணம் இவைகள் உண்டாக்கப் படும் என்றும் ஆதலால் அவைகளே தெய்வங்கள் எனவும் வழிபாடு நடத்தும் சமயமதுவாகும்.

இம்மதத்தின் விவரங்கள் பெரிய நூல்களின் காணலாம். ஆனால் சம்பந்தர் நாளில் ஒன்பது கோள்களும்

பீடை இயற்றும் சத்திகள் என்று மாத்திரம் கொள்ளப் பட்டன என ஊகிக்கலாம். இறைவனுடைய அருள் இருந் தால் இப்பீடைகளை விலக்க முடியும் என்று அவர்கள் அருளிச்செய்திருக்கிறார்கள். அதனை "வேயுறு தோளிபங் கன்...மிகவே" என்ற தேவாரப் பதிகத்தில் அறியலாம்.

அவர்காலத்திற்கு வெகுஆண்டுகளுக்குப் பின்னாலே ஆல யங்களிலும் அவை தாபிக்கப்பட்டன என அறியலாம். இச் செய்தி சரித்திர ஆராய்ச்சி ஆகும் என்றாலும் தற்போ துள்ள வழிபாட்டை உத்தேசித்து ஆலயங்களில் எந்த முறையில் எந்த இடத்தில் இவைகளை ஸ்தாபிக்கவேண்டும் என்பதைப்பற்றி நண்பர்கள் சான்றுகளோடு வெளியிட் டால் அவைகள் நன்றியுடன் இதில் வெளியிடப்படும்.

---

### சைவ சித்தாந்த மகா சமாஜம்

# 46-ம் ஆண்டு அறிக்கை

இச் சமாஜம், 1905-ம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் நிறுவப்பெற்றது. பத்து ஆண்டுகளுக்குப் பின் பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது.

இச் சமாஜத்தின் நோக்கம் சைவ சமயத்தைப் பரவச் செய்து, தமிழ்மொழியை வளரச் செய்வதேயாம். இந் நோக்கம் முற்றுப்பெறுதற்குப் பலமுறைகள் கையாளப் பட்டு வருகின்றன. அவற்றுள் சில :—

1. பத்திரிகை வெளியிடல்
2. நூல்களை அச்சிட்டு அடக்கவிலைக்கு வழங்கல்
3. கூட்டங்களை நடத்தல்
4. பிரசாரம்.

1. **பத்திரிகை :—** 'சித்தாந்தம்' என்னும் திங்கள் வெளியீடு 35 ஆண்டுகளாகச் சமாஜ அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வெளியீடு 48 பக்கங்களை உடையது. ஆண்டு ஆரம்பத்தில் சமாஜ அங்கத்தினரின் தொகை 687. ஆண்டுமுடிவில் 625.



2. **நூல்கள் வெளியீடு :—** சைவத் திருமுறைகளும், சித்தாந்த சாத்திர நூல்களும், பிறசமய நூல்களும், தமிழ் இலக்கிய நூல்களும் இதுவரை வெளிவந்த பிரதிகள் 9400. சென்ற ஆண்டில் பெரிய புராணமும், நாலாயிர திவ்விய பிரபந்தமும் வெளிவந்தன. இவ்வாண்டு தேவாரம் அடங்கன் முறையாக அச்சாகின்றது.

இவையெல்லாம் அடக்கவிலைப் பதிப்புக்களே. இவை களைத் தவிர சிறு நூல்கள் பல இனமாக வழங்கப்பட்டு வருகின்றன.

3. **கூட்டங்கள் :—** இவ்வாண்டு இராமநாதபுரத்தில் 1950 டிசம்பரில் 45-வது மகாநாடு கூடிற்று.

**நிர்வாகக் கூட்டம் :—** சமாஜ நிர்வாகக் கூட்டம் இரண்டும் பொதுக்கூட்டங்கள் மூன்றும் நடைபெற்றன.

4. **கோடை சித்தாந்த வகுப்பு :—** கண்டனூர் வையக் கரையில் மே மாதத்தில் 12 நாட்கள் சித்தாந்த வகுப்பு நடந்தது. சிவஞானபோதம் 12 சூத்திரங்களையும் உயர்திரு. கா. இராமநாதன் செட்டியார், ஔவை-துரைசாமி பிள்ளை அவர்கள் பாடஞ் சொன்னார்கள். விவரம் 'சித்தாந்தம்' 9-வது இதழில் காணலாம்.

5. **சைவத் தேர்வுகள் :—** இவ்வாண்டு ஐவர் விண்ணப் பித்தனர். நால்வர் எழுதினர். நால்வர் தேர்ச்சிபெற்றனர்.

6. **பாராட்டுக் கூட்டம்:—** நமது சமாஜ ஆண்டுவிழாவை 1929-ம் ஆண்டு திருவெண்ணெய்நல்லூரில் தமது சொந்த செலவில் மிகச் சிறப்பாக நடத்தியவரும், 'முருகன் முந் நூல்' 'மெய்கண்டாரும் சிவஞானபோதமும்' முதலிய சமாஜ வெளியீடுகட்குப் பொருளுதவிசெய்தவரும், போஷக உறுப்பினருள் ஒருவருமாகிய திரு. M. சின்னசாமி ரெட்டி யார் அவர்களுடைய அறுபதாவது ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாகத் திருவெண்ணெய்நல்லூரில் 1951 ஆகஸ்ட் 9, 10, தேதிகளில் நமது சமாஜத்தினரால் கொண்டாடப் பெற்றது.

**கணக்கு :—** 46-ம் ஆண்டு (1—12—1950 முதல் 30—11—1951 வரை) வரவு செலவு கணக்கிலிருந்து எடுக் கப்பட்ட தொகுப்பேடு கீழே தரப்படுகிறது.

126877

| வரவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| சென்ற ஆண்டு இருப்பு | 31 | 7 | 9 |
| புத்தக விற்பனை | 555 | 0 | 0 |
| 45-வது மகாநாட்டுக்குக் காகிதம், அச்சுக்கூலி வகையில் வரவு | 140 | 0 | 0 |
| பாங்க் வட்டி வரவு | 54 | 7 | 0 |
| பாங்கில் வாங்கியது | 2510 | 0 | 0 |
| சந்தா வரவு | 1585 | 13 | 0 |
| சைவப்புலவர் தேர்வுக் கட்டணம் | 8 | 0 | 0 |
| | 4884 | 11 | 9 |

| செலவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| காகிதம் | 345 | 8 | 11 |
| அச்சுக்கூலி | 2698 | 0 | ,0 |
| பாங்கில் கட்டினது | 1367 | 7 | 0 |
| தபால் செலவு | 289 | 12 | 3 |
| லிகிதர் முதலிய சில்லரை வகை | 106 | 0 | 9 |
| கவர் காகிதம் முதலியன | 3 | 12 | 3 |
| இராமநாதபுரம் மகாநாட்டில் வரவேண்டிய பாக்கி | 60 | 0 | 0 |
| ஆண்டு முடிவில் கையிருப்பு | 14 | 2 | 7 |
| | 4884 | 11 | 9 |



ஆண்டு இறுதியில் இந்தியன் பாங்கியில் கணக்குப்படி கையிருப்பு ரூ. 1900-1-10. இதில் ஞானியார் நினைவு நிதி ரூ. 802-2-6 ம் சேர்ந்திருக்கிறது.

நன்றி :—இந்த ஆண்டு சமாஜத் தொண்டில் கலந்து கொண்ட எல்லா அன்பர்களுக்கும் சமாஜம் நன்றிபாராட்டுகிறது. அங்கத்தவர் எண் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் அறுபத்திரண்டு குறைந்துவிட்டது. எனவே அங்கத்தினர் ஒவ்வொருவரும் குறைந்தது ஒவ்வோர் புது அங்கத்தினரையாவது சேர்த்துத்தர வேண்டப்படுகின்றனர்.

---

## சமாச அலுவலக மாற்றம்

சைவ சித்தாந்த மகாசமாஜம்
20, சடையப்பமுதலி தெரு
சைதாப்பேட்டை, சென்னை-15.

---

**குன்றக்குடியில் 23-12-1951-ல் நடந்த அங்கத்தவர் பொதுக்கூட்டத்தில் தேர்தல்கள்.**

## சமாஜ செயற்குழு—1952

**தலைவர் :** திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை.

**துணைத்தலைவர்கள் :** 1. திரு. வி. கலியாணசுந்தரனார்
2. திரு. உ. ராம. மே. சுப. சேவு. மெய்யப்ப செட்டியார்.

**பொதுச்செயலாளர் :** திரு. க. அரங்கசாமி முதலியார்

**துணைச் செயலாளர் :** திரு. சு. இளவழகன்

**பொருளாளர் :** திரு. க. அரங்கசாமி முதலியார்

**இதழாசிரியர் :** திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்

**துணை இதழாசிரியர் :** திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை

**கணக்குத் தணிக்கையாளர் :** திரு. எம். சிவராமன்

**பிற உறுப்பினர்கள் :** 1. திரு. எஸ். டி. அரசு, 2. ச. நடேச முதலியார், 3. க. சுந்தரவிநாயக முதலியார், 4. ஆர். ஷண்முகசுந்தரஞ் செட்டியார், 5. எம். ஆர். சம்பந்த நாயகர், 6. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், 7. எம். பி. இராமானுஜஞ் செட்டியார், 8. என். எஸ். ஏ. ஆர். அருணாசலஞ் செட்டியார், 9. சி. சிவராம செட்டியார், 10. என். டி. கிருஷ்ணசாமி முதலியார், 11. எ. சோமசுந்தரஞ் செட்டியார், 12. எம். பாலசுப்பிரமணிய முதலியார்.

## வெளியூர் ஆய்வு உறுப்பினர்கள்

**செங்கல்பட்டு :** 1. திரு. வா. தி. மாசிலாமணி முதலியார், 2. ஆர். ஆதிநாரயண முதலியார், 3. ஒளியகம். ந. ரா. ஆடலரசு.

**தென் ஆற்காடு :** 1. கி. கு. நாராயணசாமி நாயுடு, 2. பி. யு. தேவராச முதலியார், 3. எம். சின்னசாமி ரெட்டியார், 4. எம். முத்துகிருஷ்ண பிள்ளை, 5. எஸ். இரத்தினசபாபதி செட்டியார்.

**வடஆற்காடு :** 1. புரிசை முருகேச முதலியார், 2. முத்து சு. மாணிக்கவாசகனார், 3. ஆற்காடு - வரதராஜுலு செட்டியார்.

**தஞ்சை :** 1. மௌனம் - சோமசுந்தரத் தம்பிரான், 2. டி. என். சபாபதி முதலியார், 3. மஞ்சட்கொல்லை - ஞானசம்பந்த முதலியார்.

**திருச்சி :** 1. ஆர். பஞ்சநதம் பிள்ளை, 2. எஸ். கனகசபாபதி பிள்ளை, 3. டி. எஸ். சிவப்பிரகாசம்.

**மதுரை :** வி. வி. சி. ஆர். முருகேச முதலியார்.

**இராமநாதபுரம் :** 1. பிஎல். டி. எச். தேனப்ப செட்டியார், 2. சா. கணேசன், 3. சொ. நாராயணஞ் செட்டியார், 4. பழநாராயணன், 5. பாலகவி - இராமநாதஞ் செட்டியார், 6. இராம - சொ. திருநாவுக்கரசு செட்டியார்.



: 1. ந. சிவகுருநாதம் பிள்ளை, 2. இ. கே. சேதுராமலிங்கம் பிள்ளை, 3. டி. ஆர். சிதம்பரஞ் செட்டியார்.

: 1. திருமதி. அ. கு. காமாட்சி அம்மாள், 2. ஆர். பாலுசாமி செட்டியார், 3. எ. மாணிக்கஞ் செட்டியார்.

1. எ. ஆர். அண்ணாமலை, 2. டி. எஸ். அருணாசலஞ் செட்டியார்.

: 1. சி. எஸ். இரத்தினசபாபதி செட்டியார், 2. வி. சுப்பையா கவுண்டர்.

: 1. திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம், 2. கே. கோவிந்தசாமி பிள்ளை.

: 1. மங்கலக்கிழார், 2. சி. என். பி. சாரதி.

**இலங்கை :** (அ) யாழ்ப்பாணம் - 1. அ. அருளம்பலம், 2. முதலியார் - முத்துத்தம்பி, 3. அம்பிகைபாகன், 4. டி. எஸ். குலஇரத்தினம்.

(ஆ) கொழும்பு : 1. டாக்டர் த. நல்லைநாதன், 2. கே. கனகரத்தினம், 3. அருள்தியாகராசன், 4. சு. சிவசுப்பிரமணியன், 5. சுந்தரம், 6. மோகனவேலு செட்டியார்.

**பர்மா :** 1. திரு. விசாக காசி செட்டியார்.

**மலேயா :** 1. திரு. கா. இராமநாதஞ் செட்டியார், 2. திரு. ஆர். யு. கந்தையா.

## ஆராய்ச்சிக் கழகம்

1. திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்.
2. ,, எஸ். வையாபுரிப் பிள்ளை.
3. ,, டாக்டர். மு. வரதராசனார், M.O.L., Ph.D.

4. திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்.
5. ,, தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்.

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. சென்னையில் மகா சமாஜத்திற்கெனத் தனிக்கட்டிடம் ஒன்று அமைப்பதற்குரிய முயற்சிகளை உடனே தொடங்க வேண்டும் என்றும் அதற்காகக் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

1. திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்.
2. ,, க. அரங்கசாமி முதலியார்.
3. ,, ச. சச்சிதானந்தம் பிள்ளை.
4. ,, வா. தி. மாசிலாமணி செட்டியார்.
5. ,, சா. கணேசன்.
6. ,, எம். சின்னசாமி ரெட்டியார்.
7. ,, உ. ராம. மே. சுப. சேவு. மெய்யப்ப செட்டியார்.
8. ,, எஸ். இரத்தினசாமி செட்டியார்.
9. ,, சம்பந்தமூர்த்தி முதலியார்.
10. ,, சி. எஸ். இரத்தினசபாபதி செட்டியார்.

2. இக்காலத்தின் இயல்பறிந்து சிவநெறியைப் பரப்புதற்குத் தகுதியுடைய பட்டம் பெற்ற பிரசாரகர்களைத் தயார் செய்வதற்காக ஒரு சமயக் கல்லூரியைச் (Saiva Theological College) சைவ மடங்கள் ஏற்படுத்தி அதை ஒரு பல்கலைக் கழகத்தோடு இணைத்து நடத்திவர வேண்டுமென்று சைவ ஆதீன கர்த்தர்களை இம்மாநாடு பெரிதும் வேண்டிக் கொள்ளுகின்றது.

---

## அறிக்கைகள்

1. 'சித்தாந்த' வெளியீட்டைப்பற்றி எழுதுபவர் இனிமேல் சித்தாந்த ஆசிரியருக்கே எழுத வேண்டும். கட்டுரைகளை அனுப்புகிறவர்களும், கட்டுரைகளைப் பற்றி வினுக்களை எழுப்புகிறவர்களும், விளம்பரங்களை வெளியிடுவோர்களும், சித்திரப்படங்களை அனுப்புகிறவர்களும், மதிப்புரைக்காக நூல்களை அனுப்புகிறவர்களும் சித்தாந்த ஆசிரியர் முகவரிக்கு எழுதவேண்டும். சித்தாந்த ஆசிரியர் முகவரி C. M. இராமச்சந்திரன் செட்டியார், 4/89, திருச்சிப்பாதை, கோயமுத்தூர்.

2. 'சமாஜ அங்கத்தினராக இருக்க விரும்புவோரும் அதற்காக சந்தா, நன்கொடை முதலியவைகளை அனுப்புவோர்கள் சமாஜச் செயலாளருக்கு எழுதவேண்டும். தொகையும் அவருக்கே அனுப்பவேண்டும். சந்தா ரூ. 3-0-0; ஆயுள் சந்தா ரூ. 50-0-0.

செயலாளர்
20, சடையப்பமுதலி தெரு
சைதாப்பேட்டை
சென்னை-15

3. சந்தாதாரர்களுக்குச் சித்தாந்தம் இலவசமாக அனுப்பப்படும். இனிமேல் சித்திரப்படங்கள் போடப்படும். விளம்பரமும் தக்கதாக இருந்தால் வெளியிடப்படும். சமாஜ வெளியீடுகளைப் பெற விரும்புவோர்கள் செயலாளருக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## சைவப் புலவர் தேர்வு—1951

### தேர்ச்சி பெற்றவர்

1. மட்டக்களப்பு - க. அருணாசலம்.
2. கொழும்பு - வ. செல்லையா.
3. பண்டாரகம் - தம்பர். பொ. கார்த்திகேசு.
3. ஆனைக்கோட்டை - தம்பி. மார்க்கண்டு.

---

### வரப்பெற்றோம்

1. பெங்களூர் திரு. ஆ. சு. இரத்தினசபாபதி முதலியார் நினைவு மலர். முதலியார் அவர்களின் அகப்பெருமையை மயிலைகிழார் இளமுருகனார் எழுதியுள்ளார். கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தர் கலிவெண்பா முதலியன அடங்கியுள்ளன.

2. சைவ சிந்தாந்தப் புரவலர் தமிழ் வள்ளல் திரு. உ. ராம. மே. சுப. சேவு. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் இயற்றிய புள்ளிருக்குவேளூர் திருத்தணிகை முருகப் பெருமான் திருப்பதிகங்கள்.

3. சென்னை பெரம்பூர் ஸ்ரீ அகத்தீஸ்வரர் பக்தஜன சபையினரால் வெளியிடப்பட்ட "வேதாந்த சார ஸங்கிரகம்" விலை 6 பை.

4. தூத்துக்குடி கார்வார்-பு. சுப்பையா பிள்ளை அவர்களுடைய சஷ்டியப்த பூர்த்தி விழாவின் நினைவுக் குறியாக வெளியிடப்பெற்ற சோமாஸ்கந்த மூர்த்தி வரலாறு, கந்தர் சஷ்டி கவசம், நித்திய பாராயணத் தோத்திரத் திரட்டு முதலியன அடங்கிய நூல்.

---

சென்னை-600 005.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம்

46-வது ஆண்டு நிறைவு விழா, குன்றக்குடி

சைவர் மகாநாட்டுத்

# தலைமைப் பேருரை

(திரு. O. P. இராமசாமி ரெட்டியார்)

**ஆன்மநேய அன்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!**

அன்பும், அறிவும், ஆற்றலும் உள்ள இவ்வறவோர் குழாத்திற்குத் தலைமை தாங்கி நடத்த வாய்ப்பு அளித்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தாருக்கு என்னுடைய வந்தனமும் வணக்கமும் உரித்தாகுக.

உலகில் ஓர் பேராற்றல் படைத்த பெரும் சக்தி எல்லா ஜீவராசிகளிடத்திலும் ஊடுருவித் தொழில் புரிவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அது ஜடத்திலும், சைதன்னியத்திலும் துலங்கிக்கொண்டு, கல்லிலே தூங்கியும், புல்லிலே துளிர்த்தும், விலங்கிலே உலாவியும், மனிதனில் அறிவு ஆற்றலாகப் பரிணமித்தும் விளங்குகின்றது. இச் சக்தி மனிதனில் சிலசமயம் மங்கியும் துலங்கியும் அவரவர் பரிபக்குவத்திற்குத் தகுந்தபடி பிரகாசிக்கின்றது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

இந்தப் பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடி சேர வேண்டுமென்றால் மனிதப்பிறவி எடுக்கவேண்டும். மனிதன் என்ற வார்த்தைக்கே மனதையுடையவன் என்பது பொருள். இந்த மனம் எப்பொழுதும் அலைந்துகொண்டேயிருக்கும். இப்படி மனம் ஓடிக்கொண்டே இருந்தால், நம்முள் இருக்கும் ஆத்மாவை நாம் அறியமுடிவதில்லை. இந்த ஆத்மாவை, பத்தாத்மா-முக்தாத்மாவென்று இருவகையாக ஆன்றோர்கள் கூறுவார்கள். ஓடிக் கொண்டிருக்கும் மனதை, ஒருமுகப் படுத்துவதற்காகத்தான் நமது முன்னோர்கள் பலவழிகளைக் கண்டுபிடித்தார்கள்.

நமது மதத்தில் மனிதனின் பரிணாம பேதத்திற்குத் தகுந்தபடி — அதாவது, கீழ்நிலையிலுள்ள அறிவுத் துளக்கமில்லாத காட்டுமிராண்டி மனிதன்முதல் மேல்நிலையிலுள்ள ஞானிகள் வரையிலேயும்—கடவுள் தன்மை யடையும் மார்க்கத்தில் பலதுறைகளை வகுத்து, உருவமாகவும் அருவமாகவும் அவரை வணங்க வேண்டுமெனச் சொல்லப் பட்டிருக்கிறது.

மேல் நிலையில் இருப்பவர்கள் தவிர மற்றவர்கள் உருவவுபாசனை மூலமாகத்தான் கடவுளை அறிந்து, அடைய முடியும். பெரும்பான்மையான ஜனங்களுடைய நன்மையை உத்தேசித்துத்தான், கோவில்களை ஏற்படுத்தி, அங்கு அர்ச்சாவதாரமாகச் சிவன், விஷ்ணு, அம்பிகை, முருகன், கணபதி முதலிய உருவங்களை ஸ்தாபித்து, அவற்றை வணங்கி அதன் மூலமாகக் கடவுள் தன்மையை அடைய நமது நாயன்மார்களும், பிற பக்தர்களும், ஆழ்வாராதிகளும், நமது நாட்டில் வழிகாட்டிப் போயிருக்கிறார்கள். கடவுளை ரூபமாக வழிபடும்போது அவரைச் சர்வ சக்தி வாய்ந்தவராகவும், இவ்வுலகைப் படைத்துக் காத்து அழிப்பவராகவும், சகல ஜீவராசிகளுக்கும் அளவற்ற கருணையுடன் தந்தையும் தாயுமாகயிருந்து காப்பாற்றுபவராகவும் நினைக்கிறோம். அவனை அணுகி அவருடன் வாழ்



வதே முக்தி. இந்த நிலையை நாம் அடையவேண்டுமென்றால், முதலில் சிரத்தையும், பக்தியும் வேண்டும்.

இந்த பக்தியும் சிரத்தையும் மேன்மேலோங்க, ஜீவ காருண்யமும், பூத தயையும், ஈஸ்வர பக்தியும் அதிகரிக்கின்றன. ஈஸ்வரபக்தி அதிகமாக ஆக ஜீவசேவையே சிவ பூஜையாக முடிகின்றது.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே"

என்னும் திருமூலர் திருவாக்கை நோக்குவோமானால், பற்றற்றுச் செய்யும் ஜீவசேவையே சிவபூஜையாக மாறுகின்றது என்பது புலப்படும். மேலும் இறைவன் எவ்விடத்தும், எப்பொருளிலும் வியாபித்து, மறைவாகவுள்ளான் என்றார் ஓர் பெரியார். இன்னொரு பெரியார், அவன் எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உயிராய் நின்று அவற்றை அகத்தும் புறத்தும் நடத்தும் மெய்ப்பொருள் என்பர். நீராய், நிலமாய், தீயாய், காலாய், நெடுவானாய், சீரார் சுடர்கள் இரண்டாய், எல்லாமாய், எல்லாத் தெய்வங்களுமாய் இறைவன் நிற்கின்றான் என்றும் ஞானநூல்கள் பேசும்.

பிறப்பில்லாத பகவானும் அருளால் உலகத்தை உய்விக்கும் பொருட்டு, மனித வடிவோடு அவதரிப்பான் என்று கீதை கூறும். உயிர்களை ஆட்கொள்ளும் பொருட்டு, அவன் திருக்கோயில்களிலே அருள் திருமேனி தாங்கி எழுந்தருளி இருப்பன் என்பர் ஆகமநூலார். சுருங்கச் சொல்லின் இறைவன் உருவமுடையவனும், அருவமானவனும், உருவ அருவங்கட்கு அப்பாற்பட்டவனும் ஆவன் என்னலாம். ஆதலின் இறைவனைத் திருக்கோயிலில் வழிபடுவார் பலர். நெஞ்சமாகிய கோயிலிலே வழிபடுவார்

சிலர். எல்லாவுயிர்களிலும் அவனைக் கண்டு வழிபடுவார் சிற்சிலர். ஐம்பெரும் பூதங்களிலும் வழிபடுவாருமுளர். அன்பர்கள் கருதும் வடிவங்களை எல்லாம் தாங்கிக் கொண்டு முன்னிற்பவன் அவன். இவை தவிர, இறைவனை ('சத், சித்து, ஆனந்த') வடிவாக - அதாவது, உண்மை, அறிவு, இன்பவடிவாக-வழிபடுவோரும், 'உவரா இன்பச் சுடர்', வடிவாக வழிபடுவோரும் உளர். அருவமாம் கடவுள் அன்பிற்கு வசப்பட்டு உறைந்து வடிவங் கொள்ளலும் உண்டு. உருவுற்ற கடவுள் ஞானவெம்மையால் உருகி அருவமாக நிற்றலும் உண்டு.

"ஒன்றென் றிருதெய்வம் உண்டென் றிருதயர செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமும் நட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமனமே உனக் கேஉப தேசமிதே"

என்றார் பட்டினத்தடிகள்.

ஆகையால் தெய்வம் ஒன்றேயாகும். யோகியார் இறைவனைத் தம் இதயத்தில் வழிபடுவார். சமதர்சிகள் அவனை எங்கும் வழிபடுவர். இறைவனைக் கணவனாக வழிபடுவது போல, கணவனை இறைவனாக வழிபடும் நங்கையரும் உளர். அதிதியை இறைவனாக வழிபடுபவரும் உளர். குருவையும், மாதரையும், அடியார்களையும், பொதுவாக மக்களையும், எல்லாச்சீவராசிகளையும் இறைவனதுவடிவமாகவழிபடுவோரும் உளர். வடிவத்தையே பற்றுது அவ் வடிவத்தைத் தாங்கும் இறைவனையே வணங்கி அன்பு செய்யின், இறைவன் எங்கும் தோன்றி அருள்பாலிப்பான். இவையனைத்தும், இறைவனை வழிபடும் பலவகையாம். அன்பு, பக்தனைப் பகவானோடு முடிவில் இரண்டறக் கலக்கும்படி செய்யினும், அந்நிலையை அன்பர் விரும்பாது, வேறாக நின்று மெய்யன்பு செலுத்துவதையே விரும்புவர்; கற்கண்டாகி விடுவதிலும் கற்கண்டின் சுவையைச் சுவைத்தலே மேலெனக்கொள்வர்.



"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்றார் திருமூலர். எல்லா உடல்களிலேயும் இறைவன் ஊடுருவி நின்று, இயங்கி, ஆக்கல், காத்தல், அனுக்கிரஹித்தல் முதலிய தொழில்களை உயிர்களின் நலங்கருதிச் செய்வதனாலே, பற்றற்று அவைகளுக்குச் செய்யும் ஜீவ சேவையே சிவசேவையும், சிவபூஜையும் ஆகும் என்று கொண்டு, நம் நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும், சித்தர்களும், யோகிகளும் பயன்கருதாமல் தொண்டு செய்தார்கள் என்பது இதனால் விளங்கவில்லையா? பக்தியின் பெருமை அளவிடற்கரியதாகும். சிறந்த பக்தர்களைப் பற்றிக் கூறுமிடத்து, அப்பர் பெருமான்,

"காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே"

என்று அருளிச் செய்துள்ளார். இத் திருநேரிசையிற் கூறியுள்ள நிலைமையை அடையவேண்டுமென்றால் முதலில் உடலையும், மனதையும் பரிசுத்தமாக்க வேண்டும். பொறி புலன்களை அடக்கி, வாய்மையும் தூய்மையும் அடைந்து, இருதயத்தில் உள்ள ஒளியை அழகிய லிங்கமாகக் கொண்டு, அன்பெனும் பக்தியையே நெய்யும் பாலுமாக நன்கு நிறைய அபிடேகம் செய்து, துதியை அவியுணவாக ஈசனுக்கு அளித்துப் பூசிக்க வேண்டும் என்று அகப்பூசை செய்யும் முறையைக் காட்டினார்கள். அடியார்கள் எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பார்கள். பகவான்—"அங்கிங்கெனாதபடி", "பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற" பரந்து உறைவதையும், எல்லா உடல்களிலும் உயிராக

இலங்குவதையும் தெளிவாகக் காண்பார்களாதலின், அவர்கள் அனைத்துயிரிடத்தும் அன்பு செறிந்தவர்களாய் அவைகட்கு நன்மை செய்தலிலேயே கருத்துடையவர்களாய் வாழ்வார்கள். ஏனெனில், உயிர்க்குத் துன்பம் செய்தல் இறைவனுக்குத் துன்பம் செய்தலேயென அவர்கள் அறிந்தவர்கள்; "எல்லாம் உன் அடிமையே; எல்லாம் உன் உடைமையே; எல்லாம் உன்னுடைய செயலே" என்னும் உண்மையை அறிந்த மெய்யடியார்கள். ஆதலால் அவர்கள் சமதர்சனமும் சமநிலையும்உடையவர்களாய்த் திகழ்வர். அவர்கள் தமக்கும் பிறர்க்கும் வேறுபாடு அறியார். தமது பொருளுக்கும் பிறரது பொருளுக்கும் வேறுபாடு காணார்; எல்லா உயிர்களையும் சமமாக நோக்குவர்; வித்தையும் விநயமும் உடைய செந்தண்மை பூண்டொழுகும் அந்தணனையும், பசுவையும், யானையையும்,நாயையும், சண்டாளனையும்சம நோக்குடன் பார்ப்பர்; எங்கும் ஈசனையே பார்த்தலின்,பகை, ஞானம், குலம், கல்வி, பயம், புகழ், ஜாதி, ஆணவம் என்னும் எட்டுவித விலங்குகளை விலக்கிவிடுவர். "ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்"; இறைவன் துன்பத்தை அளிக்கினும், இன்பத்தை அளிக்கினும், எல்லாம் அவன் அருளென்றிருப்பர்; "கொண்டாளா யாகிலும் உன் குரைகழலே கூறுவனே" என்பர்; "நன்றே செய்வாய் பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகமே" என்று கவலையின்றி இருப்பர்;

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

என்று இருப்பர்; நீற்றறையில் உள்ளபோதும்—

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்று துன்பமும் இன்பமாகப் பெறுவர்.



இறைவனையே பொருளாகக் கொள்வாராதலின், வேறெதையும் பொருளாக அவர் மதியார். அவனொழிந்த எதனிலும் எள்ளளவும் பற்று வையார்; எச்செயல் புரியினும், உலக வாஞ்சை ஒரு சிறிதேனும் அதற்குக் காரணமாக இடம் கொடார்; இறைவனே மனமுழுவதிலும் நிரம்பி இருத்தலின், வேறு நினைவுகளும் ஆசைகளும் எழ வழி இல்லாது போகின்றது. ஒளியுள்ள இடத்து இருள் இருத்தல் இயலாதவாறே, இறைவன் எழுந்தருளியுள்ள உள்ளத்தில் ஆசை உதித்தல் முடியாது போம். மேலும் "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்றபடி அவர்கள் தம்மை இறைவன் கைக் கருவிகளாகக் கருதுவதால், அவர்கள் சீவ போதம் முற்றும் ஒழிந்தவராகியிருப்பதையும் அவர்கள்பால் சிவ போதமே வெளிப்படுவதையும் காணலாம்.

ஆதலால், அத்தகைய அடியார்களது நினைவு, சொல், செயல்களை இறைவனது திரு உள்ளத்தினின்று எழுந்து அவர்கள் வாயிலாக வெளிப்படும் ஆணையின் வடிவங்களாகக் கருதுதல் முறையாகின்றது. அவர்கள் நடமாடும் கோயில்களாகின்றனர். அவர்களை உற்று நோக்கும்போதே உலக மக்கட்குத் தெய்வத்தன்மை இன்னதென்பது புலனாகின்றது. அவர்களை மக்கள் அணுகும் போது, தமது உள்ளங்களில் சாந்தியும் தூய்மையும் ஒருவாறு தங்குவதை உணர்கின்றனர். ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்கு நாம் எளிதாகச் செல்வதுபோல அடியார்கள், மனிதத்தன்மையிலிருந்து தெய்வத்தன்மை என்னும் அறைக்கு எளிதாகச் சென்று மீளும் திறமையுடையவர்களாகின்றனர். அம்மட்டோ! அவர்களிடம் மனிதத்தன்மை காணப்படும்போது தெய்வத்தன்மையின் சம்பந்தம் நீங்காமலே இருக்கின்றது. அவர்களிடத்தே மனிதர்க்கு இருக்கும் குற்றம் குறைகள் தேய்ந்து மாய்ந்து போனமை தெளிவாகத் தெரிகின்றது. தெய்வீக சக்தியே

அவர்களை ஆட்டிவைத்தலின், அவர்கள் மக்களின் உள்ளங்களில் மறைந்து கிடக்கும் ஞானவல்லமைகளைத் தட்டி எழுப்பிச் சுறுசுறுப்பாக வேலை செய்யத் தூண்டும் திறமையுள்ளவராக ஆகின்றனர். அடியார்களைச் சாதாரண மக்கள் தம்மினும் வேறுபட்ட மேன்மக்களாகவும், தனிப்பட்டவராகவும் கருதுவார்கள். ஆயினும் அடியார்கள் தம்மை ஏனைய மக்களைப் போன்றவராகவும், இறைவனது அருளாலேயே தாம் உயர்ந்த நிலையை எய்தியதாகவும், அவ்வருள் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவாக உரியதாகவும், எல்லாமக்களும் 'இறைவனது அருமை மக்களே யாவரென்பதாகவும், ஒரு மனிதன் அடையும் உயர்நிலை எதுவாயினும் அதனை வேறெந்த மனிதனும் தக்க முயற்சியால் அடையக் கூடுமென்பதாகவும் வற்புறுத்தி அனைவர்க்கும் தன்னம்பிக்கையை ஊட்டி வருவார்கள்.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற முறையிலே, "நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து உள்ளங் குழைந்து" பக்தியாலும் அன்பின் பெருக்கினாலும் உள்ளம் பூரித்துப் பாடிய அருட்பாக்கள் இன்று தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், அருட்பா முதலியனவாகப் பரிணமித்துள்ளன. அந்தக் கொள்கைகளையும் கருத்துக்களையும் ஜனசமூகத்தில் பரப்பி மக்களைப் பக்திப் பரவசராக்குவதற்காக நம் முன்னோர்கள் கோயில்களையும் மடங்களையும் ஏற்படுத்திக் குருகுலங்களை ஸ்தாபித்தனர். இவைகளில் தங்கியிருந்து இறைபணி தலைமேற் கொண்ட தொண்டர்கள் சைவ, வைணவ, சித்தாந்த வேதாந்தங்களை மக்கட்குப் போதித்து, எளிய வாழ்க்கையை நடத்தித் தங்கள் வாழ்க்கையே உலகத்துக்கு வழி காட்டியாக இருக்கும் படியான நிலையிலே தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக விளங்கினர். இதனால் சேவாஸ்ரமங்களும், குருகுலங்களும், மடங்களும், கோயில்களும் செவ்வனே



நடைபெறுவதற்காக மானியங்கள் விடப் பெற்றன. அவைகளைக் கொண்டு இலக்கியம், புராணம், நீதிநூல், ஞானநூல் முதலிய நூல்களும் சிற்பம், ஓவியம், சங்கீதம், நாடகம், மருத்துவம் முதலிய கலைகளைக் கற்பிக்கவும், மருத்துவச் சாலைகள், பசுமடம், நந்தவனம், சத்திரம், சாவடி, சாலைகள், ஆதுலர்சாலை, சோலை, அறுசமயத்தோர்க்கு உணவு, ஓதுவார்க்கு உண்டி முதலிய 32 தர்மங்களை நடத்துவதற்குச் சேர, சோழ, பாண்டிய அரசர்களும், பொதுஜனங்களும், அறிவாளிகளும் தகுந்த மானியங்களும், பொருளுதவியும் செய்தனர். அதனால் இவ்வறங்களைக் கிரஹஸ்தர்கள் நடத்துவதென்றால் காரியம் செவ்வனே நடைபெறாதென்றும், அவற்றைப் பற்றற்ற உள்ளம் கொண்ட கருமயோகிகளாகவும், பக்தி யோகிகளாகவும் உள்ள பற்றற்ற துறவிகளிடத்தில் ஒப்பித்தால் பக்தி சிரத்தையுடன் நடத்துவார்கள் என்ற எண்ணத்தினால் அல்லவோ, அவைகளை நிருவகிக்கத் தகுதிவாய்ந்த சீலத் தொண்டர்களிடத்தில் அவைகளை ஒப்புவித்தார்கள். ஆனால் அவைகள் நமது மாகாணத்தில் இப்போது எவ்விதம் நிருவகிக்கப்படுகின்றன என்று நாம் நோக்குங்கால், கோயில்களிலும் மடங்களிலும் அவைகளைச் சார்ந்த நிலையங்களிலும் நம் முன்னோர்கள் நினைத்தபடி காரியங்கள் சிரத்தையுடன் நடத்தப்படவில்லை என்று நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டி இருக்கிறது. அநேகக் கோயில்களைச் சென்று பார்க்கும்போது, அங்கே இறைவன் திருமேனியிருக்கும் கர்ப்பக்கிரஹமும், அந்தராளமும் இருட்டில் வௌவால்கள் அடைந்து துர்நாற்றம் வீசும் இடங்களாகக் கிடப்பதையும், அங்குத் தெய்வத்தன்மையே பரிணமிக்காமல் இருப்பதையும் நாம் காண்கிறோம். தவிர, கோபுரங்களிலும், மண்டபங்களிலும், மதில்களிலும், செடி, கொடி, முட்கள் வனமாக வளர்ந்து, கட்டிடங்களை இடித்து வருவதையும் நாம் பார்க்கின்றோம். இங்கு,

"கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே.''

"ஆற்றரு நோய்மிக் கவனிமழை யின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திரு கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.''

"முன்னவனுர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே''

என்ற திருமூலவர் திருவாக்குக்களை ஞாபகப் படுத்திக் கொள்வோமாக.

மேலே எடுத்துக்காட்டியபடி சீர்கேடடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை, மடாதிபதிகளுடையதும், தர்ம கர்த்தர்களுடையதும், பொது ஜனங்களுடையதும், அரசாங்கத்தினுடையதும் ஆகும் அன்றோ ! தற்சமயச் சீர்கேடுற்ற நிலைமை அரசாங்கத்திற்கும் பொது ஜனங்களுக்கும் உண்டான சிரத்தையின்மையையும் பக்தியின்மையையும் காட்டுகிறதல்லவா ? இதனல் அல்லவோ நாட்டிலே நிரீஸ்வரவாதம் வளர்ந்து ஒழுக்கக் குறைவும், சீலக்கேடும் பரவிவருகின்றன. இதற்கு நாட்டில் உள்ள அறிஞர்களும், மடாதிபதிகளும், காரணஸ்தர்கள் அல்லவா ? சிறப்பாக, மடாதிபதிகள் இனியேனும் அதிக அக்கரை எடுத்துக்கொண்டு, ஜில்லாவுக்கு ஓர் சேவாஸ்ரமத்தை ஏற்படுத்தி, ஆங்காங்கிருக்கும் தொண்டர்களுக்குத் தக்க பயிற்சி அளித்து, ஜனங்களுக்கு ஒழுக்கமும் சீலமும் போதித்து, சன்மார்க்கப் பிரசாரம் செய்து, அவர்கள்



தங்கள் கடமைகளைத் திருத்தமாய்ச் செய்யச் சூழ்நிலையை உண்டாக்குவார்கள் என்றும், கடவுள் தன்மையைப் பரவச் செய்வதற்கும் போதிய ஏற்பாடு செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.

குறிப்பாக, சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் வருடாந்திரக் கூட்டங்களில், கடந்த வருடத்தில் என்ன திட்டத்தை வகுத்தோம் ? அதில் எத்தனை பேர் சிரத்தை எடுத்துக் கொண்டனர் ? எவ்வளவு தொண்டு நடைபெற்றது ? அதற்கிருக்கும் தடைகள் எவை ? அவற்றை எப்படி நீக்குவது ? என்னும் விஷயங்களெல்லாம் நடைமுறையில் வைத்துச் சர்ச்சை செய்து எல்லோரும் அதில் ஈடுபடுதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இம்மகா சமாஜம் செய்வது உசிதமென்று எண்ணுகிறேன். நமது நாட்டிலே புதிதாகத் தருமங்கள் செய்யவேண்டியதில்லை. இருக்கிற தருமங்கள் செவ்வனே நடைபெற ஏற்பாடு செய்தலும், எங்கெங்கு பலவீனம் தென்படுகிறதோ அங்கெல்லாம் சென்று, அங்குள்ள மக்களை அணுகி, எல்லாக் கடமைகளும் செவ்வனே நடைபெற அவர்களைத் தூண்டிச் சேவை செய்வோமாக. தவிரவும் இப்பொழுதிருக்கும் மடங்களைச் சார்ந்த கல்விச் சாலைகளில், தேவாரம், திருவாசகாதி திருமுறைகள், திருப்புகழ், திருக்குறள் முதலிய தமிழ் மறைகளைப் போதிப்பதோடு நின்று விடாமல், தொழிற் படிப்பும் ஆங்கில அறிவும்கூட மாணவர்க்குக் கிடைக்கும்படி செய்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடன் நடத்திச் சன்மார்க்க சீலர்களாக வாழ ஏற்பாடு செய்வது மிக உசிதமென்று எண்ணுகிறேன். இதற்கு எல்லா மடங்களும் ஒன்று சேர்ந்து, ஒரு பொதுநிதியை ஏற்படுத்தி, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஓர் குருகுலமாவது எளிய நடையில் தூய முறையில் நடத்த வழி செய்வதும் உசிதமென்று எண்ணு

கின்றேன். இப்படி நமது மடாதிபதிகளும் சிவநேசச் செல்வர்களும், முதலில் சேவை செய்து வழி காட்டினார்களானால், பக்தியிலும் ஒழுக்கத்திலும், நம்பிக்கையுள்ள பிற அறிவாளிகளும், பெரியோர்களும், மேலும் மேலும் உதவி செய்யப் பின்வாங்க மாட்டார்களென்று அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம். நம்நாட்டில் தருமம் நடக்காமலில்லை. அது பல வழிகளிலே சிதறுண்டு சுமார் 60 கோடி ரூபாய்க்கு நடக்கிறதென்று தெரிகிறது. மேல் நாட்டில் குறிப்பாக, அமெரிக்காவில் (Community Chest) என்ற ஓர் சங்கம் ஏற்படுத்தி அதைச் செவ்வனே நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு அமெரிக்கனும், தன்னுடைய வருவாயில் ஓர் பகுதியைக் குறிப்பிட்ட ஒரு அறத்திற்கோ, பொதுவாகவோ, அந்தச் சங்கத்திற்கு அனுப்பி, அதன் மூலமாகப் பங்கிட்டு, தங்கள் நாட்டிலும், உலகத்தில் பல நாடுகளிலும், பல துறைகளில் மக்கள் நலத்திற்காகச் செய்யவேண்டிய தொண்டுகளைச் செவ்வனே செய்து வருவதாக நான் சில பத்திரிகைகளின் வாயிலாக அறிந்தேன். நம் நாட்டில் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கும் தருமங்கள் செவ்வனே நடாத்தற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கி, மேற்சொன்ன அம்முறையை நாமும் பின்பற்றலாம்.

இப்படிப் பின்பற்றி நாம் நடந்து, பொதுமக்களிடத்தில் நம்பிக்கை உண்டாக்குவோமானால், எறும்பு முதல் ஞானிவரையிலேயும் ஜீவகாருண்யத்துடன் உணவளித்துப் போஷித்து வந்த நமது பெருமக்கள் இதற்கு ஆதரவளிக்காமல் இருக்கமாட்டார்கள். நாம் சிறிது சிரத்தை எடுத்துக் கொண்டு சரிவரத் தொண்டு செய்து, பணத்தைச் சுயநலத்திற்காகவும் போக போக்கியங்களுக்காகவும் விரயம் செய்



யாமல், இருந்தோமானால் எல்லாம் சரிவர நடக்கவாய்ப்புப் பெறலாம்.

"காமமும் கொலையும் கள்ளும் கவறுடன் கடின வட்டித்
தீமையும் திருடும் பொய்யும் சிறுமையுங் கொண்ட மாந்தர்
நேமமொன் றில்லா நீசர் நெஞ்சிலே அன்பே இல்லார்
சாமியின் பெயரைச் சொல்லித் தனக்குவை சேர்த்தா ரம்மா"

என்றபடி நாம் நடக்காமல் இருப்போமாக. தவிர, நமது நாட்டிலே கோவில்களுக்கு நம்மில் அநேகர் செல்வதில்லை. கிறிஸ்துவர்களையும், மகமதியர்களையும் பாருங்கள். அவர்களில் பெரும்பான்மையோர் வாரத்தில் ஒரு நாளாவது கோவிலுக்குச் செல்லாமல் இருப்பதில்லை. மேலும் அவர்கள் தொழுகை நடத்துகிறார்கள். நாம் ஞானிகளாக இருந்தால் கோவில்களுக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. அந்த ஞானிகள்கூட, முதலிலே இந்தக் கோயில்களில் வழிபாடு செய்து தான், ஞானத்தை அடைந்தார்கள் என்பது அவர்களுடைய பக்தி ரசமான பாடல்களினாலும், சரித்திரத்தினாலும் தெரிய வருகின்றது. அவர்கள் "பார்க்கு மிடமெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர"ணனை எங்கும் கண்டாலும், இந்தக் கோயில்களில், பக்த கோடிகள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு, தாங்களும் தொழுது, மற்றவர்களும் தொழும்படி போதிக்கின்றார்கள். தவிரவும் சில பெரிய கோயில்களில் அவர்களுடைய சமாதிகளும் இருப்பதாகச் சில பெரியோர்கள் வாயிலாகக் கேட்டுள்ளோம். இனி இச்சைவ சித்தாந்த மகா சமாஜ அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொண்டில் ஈடுபடுதல் நன்று. என்னென்ன தொண்டில் யார் யார் ஈடுபட்டார்கள்? அவரவரால் [illegible] முடிந்தது என்னும் விவரங்க[illegible] காட்ட ஒரு ரிஜி[illegible] வைத்துப்

186877

பதிவுசெய்து வரலாம். அன்றியும், வேலை முறைகளை அவ்வப்போது பரிசீலித்து, அநுபவ நற்கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டுவதும் அவசியம். இந்த ஆலோசனைகளை நீங்கள் ஒத்துக்கொள்வீர்களென்று நம்புகிறேன்.

இத்தகைய தொண்டுகளை யாற்றுதற்கு வேண்டிய அன்பும் ஆற்றலும் வற்றாமல் மேன்மேற் பெருகுதற்கு சமாஜ அங்கத்தினர்கள் ஓர் நல்லுபாயத்தைக் கையாளலாம்; ஒவ்வொரு குடும்பத்திலும், தலைவனும் தலைவியும் குழந்தைகளுடன் நாள்தோறும் காலையும் மாலையும் ஒரு அரைமணி நேரமாவது கடவுளைத் தொழுவதை அங்கத்தினர்கள் நடைமுறையில் காட்டி, அவர்களுடைய நண்பர்களையும் உறவினர்களையும் தூண்டலாம். இங்ஙனம் செய்வார்களென்று எதிர்பார்க்கின்றேன்.

“ யாவர்க்கு மாம்இறை வர்க்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே ”

என்ற திருமந்திரத்தை நினைவு கூர்வோமாக.

மேனாட்டுப் பாதிரிமார்களைப்போல நாமும் சமூகத் தொண்டு செய்ய முன்வரவேண்டும். குறிப்பாக, ஒவ்வொரு ஜில்லாவிலேயும் ஒரு குருகுலமும், ஓர் அனாதை ஆஸ்ரமமுமாவது ஏற்படுத்தி, உண்டி உடை உறையுளும், கல்வி கேள்விகளுக்கு வேண்டிய பிற வசதிகளும் செய்து, அறிவு வளர்ச்சித் தொண்டு செய்வதுடன் தொழில் பயிற்றும் தொண்டும், வேளாண்மையும், வாணிபமும் தாளாண்மையுடன் செய்து, துன்மார்க்கத்தை நீக்கி நன்மார்க்கத்தைக் கடைப்பிடித்து, சன்மார்க்கச் சீலர்களாக மக்கள் யாவரும் திகழ்தற்குத் தொண்டு புரிய நம்மெல்லோர்க்கும்



அன்பும் அறிவும் ஆற்றலும் எல்லாம் வல்ல இறைவன் அளித்துஅருள் பாலிப்பானாக !

“ பவபந்தம் போயொழியப் பரமசுகம் அருளாய்
சிவஜோதி சிவராஜ்யம் சிவசக்தி இலகும்
புவிவாழ்வைப் பொதுநலம்செய் யோகமெனப் புரிவாய்
தவசித்தி தருகின்ற தணவேலஓம் சரணம் ”.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக !

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை

நன்கொடைக்கு ஒரு சதுரம் கல் பரப்பப்படுகிறது. அன்பர்கள் இத்திருப்பணியில் ஈடுபட்டு இறைவன் திருவருளுக்குப் பாத்திரம் ஆவார்களாக.

*25-12-51* திருவையாறு ஐயாறப்பர் முன் மண்டபத்தில் திருத்தொண்டர்புராணம் விரிவுரை நடைபெறுகிறது. ஆசிரியர் கோவிந்தசாமி பிள்ளையவர்கள் முறையாகப் போதிக்கிறார்கள். இன்று தில்லைவாழந்தணர் சருக்கம் தொடங்கப்பெற்றது.

*29-12-1951* அன்று பூவாளூர் சிவன் கோயிலில் திருமுருக கிருபானந்தவாரி அவர்கள் 'சூராதிகள் வரலாறு' என்பது பற்றிப் பேசினார்கள்.

*31-12-51* பழனியில் திருவெம்பாவை திருப்பாவை மாநாடு நடைபெற்றது. சித்தாந்த ஆசிரியர் தலைமை வகித்தார். பல அறிஞர்கள் பேசினார்கள்.

---

**University Lectures**

**SAIVA SIDDHANTHA**

**M. Balasubrahmanya Mudaliar**

Price Rupee One

Registered Post Annas Five—No V.P.P.

*Apply to :*

**150, Govindappa Naicken Street,**
**G. T. Madras-1**